தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௰௯	மலர்
	விளம்பி, மார்கழி	
௩௪	1958 டிசம்பர், 1959 சனவரி.	௯

அறிஞர் — சர். ஜகதீச சந்திர போஸ்.

சி. இராமலிங்கம், M. A., அண்ணாமலைநகர்.

விஞ்ஞானக்கலை இந்நாளில் உலகெலாம் விரைந்து வளர்ந்து வருகின்றது. நமது நாடும் விஞ்ஞான வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டு இன்று விளங்குகின்றது. இத்தகைய வளர்ச்சிக்குத் துணைநின்றோர் பலராவர். அவர்களுள் தலைசிறந்து, திகழ்ந்தவர் சர். ஜகதீச சந்திர போஸ் ஆவார்.

கடந்த நவம்பருடன் ஜகதீசர் பிறந்து நூறுண்டுகள் நிறைவு பெற்றன. அறிஞரை, நாடு முழுமையும் நினைவு கூர்ந்து, அவர் கண்டறிந்த பேருண்மைகளைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தியது. அவர் தம் புகழ் எல்லையற்று விளங்குகிறது.

பிறப்பு:

வங்காளத்தில் டாக்கா ஜில்லாவில் விக்கிரம்பூர் என்ற சிற்றூரில் 1858-ம் ஆண்டு நவம்பர் 30-ல் ஜகதீசர் தோன்றினர். அவர் தந்தை பகவன் சந்திர போஸ் பரித்பூரில் உதவி நீதியாளராவர். ஜகதீசரின் இளமை வாழ்வு பரித்பூரில் அமைந்தது.

கல்வி:

போஸின் இளமைக் கல்வி பரித்பூர் பள்ளியில் தொடங்கியது. தாய்மொழியிலேயே முதன் முதல் கல்வி புகட்டப்பெற்றார். அவர் தம் பள்ளித் தோழர்கள் ஏழை உழவர் மக்களேயாவர். அவர்கள் நட்பு, இயற்கை அழகைக்கண்டு இன்புற அவரைப் பழக்கியது. ஒன்பது வயதுக்குப்பின் ஆங்கிலக் கல்லூரியில் கல்கத்தாவில் பயின்றார். பின்னர் சவேரியார் பள்ளியில் பத்தாவது வகுப்புத் தேறினர். தொடர்ந்து அக்கல்லூரியில் பயின்று பி. ஏ. பட்டம் பெற்றார். சின்னாள் கழித்து மருத்துவத் துறையில் பயிற்சிபெற இங்கிலாந்து ஏகினர். ஆனால் அவர் தம் உடல் நலிவு, மருத்துவத் துறைபயிலும் விருப்பத்திற்கு இடை நின்றது. பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பயின்றார். பொருள்—தன்மை நூல், பொருளமைப்பு நூல், தாவர நூல்-(Physics, Chemistry, Natural Science) ஆயவற்றில் பெரிதும் ஆர்வம் கொண்டார். சிறந்த பேராசிரியர்களை அடுத்து, துணைபெற்று, சிறக்கப்பயின்று பட்டம்

பெற்றுத் தாய் நாடு போந்தார். அன்னாரின் அறிவுத்திறனை அறிந்த பேராசிரியர் பாஸட் இந்தியாவில், சிறந்த பணியில் ஜகதீசரை அமர்த்தக்கருதித் தகுந்த துணைசெய்தனுப்பினர்.

தொழில் நிலை :

போஸ் கல்கத்தா மாநிலக் கல்லூரியில் "பொருள்-தன்மை நூல்" ஆசிரியராகப் பதவி ஏற்றார். இந்தியன் ஒருவன் இத்துறையில் பணியாற்ற இயலாது என்ற வெள்ளையரின் எண்ணத்தை அறிந்து போஸ் வருந்தி அவ்வெண்ணத்தை மாற்றும் வகையில் நாற்பது ஆண்டுகள் திறம்படத் தன் அலுவலைச் செய்துள்ளார். அந்நாளில் ஒத்த பதவியில் பணியாற்றினும் சம்பளத்தில் இந்தியருக்கு வேறுபாடு காட்டப்பட்டது. இத்தவறை மாற்றக் கருதிய ஜகதீசர் மூன்றாண்டுகள் சம்பளம் வாங்க மறுத்து, ஊதியமில்லாமல் பணி செய்தார். வெள்ளையர் — ஆட்சியாளர் தம் தவறை உணர்ந்து ஜகதீசரின் பணியினை நிலையுடையதாக்கிக் கழிந்த காலத்திற்கும் சேர்த்து ஊதியம் வழங்கினர்.

போஸ் தமது ஆசிரியப்பதவியின் தொடக்க காலத்தில் நேர்ந்த பொருள் நெருக்கடியாலும் பெற்றோர் பிரிவாலும், தம் ஆய்வை நடத்த இயலாமற்போனர். 1895-ம் ஆண்டு முதல் மின்சார ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஒரு கருமானின் உதவிகொண்டு தம் ஆய்வுக் கருவிகளை முதன் முதல் இந்தியாவிலேயே செய்தார். அவர் தம் முயற்சியும் ஆர்வமும் அளவிடற்கரிது. அவர் மின்னாற்றலின் நிலைகளிற் சில கூறுகளை நுணுகி ஆய்ந்து தாம் கண்ட உண்மைகளைக் கட்டுரை வடிவில் (Journal of the Asiatic Society of Bengal) வங்கப் பத்திரிகையில் பதிப்பித்தார். மேலும் தாமறிந்த உண்மைகளை இங்கிலாந்து "அறிவியல் பேரறிஞர் கழகத்துக்கு" (Royal Society of Scientists) அனுப்பினர். போஸின் அறிவுத் திறனைக் கழகம் பாராட்டி அவருக்கு டாக்டர் பட்டம் அளித்தது. ஆங்கில அறிஞர் பலர் பாராட்டினர்.

அரசாங்கம், ஜகதீசர் தொடர்ந்து ஆய்வு நடத்தப் பொருளுதவி செய்து இங்கிலாந்து செல்லவும் துணை நின்றது. அந்நாளில் வாழ்ந்த பெரிய விஞ்ஞானிகளைக்கண்டு அளவளாவியதில் பேருக்கம் கொண்டார். 1897-ம் ஆண்டு (FARADAY) ஃபேரடே என்ற பேரறிஞர் பெயரால் அமைந்த சொற்பொழிவுகள் ஆற்றினர். மின் அலைகளது தோற்றம், பரவல், வெளியில் பரவும் நிலை-(Hertizian waves and their propagation through space) போன்றவற்றை ஆராய்ந்தார். லாட்ஜ், (MARCONI) மார்க்கோனி ஆகியோரும், இத்துறையில்தான் ஆய்ந்துவந்தனர். உயிரில் பொருள்களும், மின்னாற்றலால் தூண்டப்படுகின்ற நிலையில் செயற்படுவன, என்ற உண்மையினை ஓயாது உழைத்த ஆய்வின் முடிபாகக் கண்டார். உயிரற்ற உலோகமும் மின்னாற்றலால் இயங்கும் என்பதை நிரு

பித்தார். தாவரங்களின் உயிர்த்துடிப்பைத் தருந்த கருவிகள் மூலம் கண்டுணர்ந்தார். அவர் தம் ஆய்வால் தாவரங்களும் மக்களைப் போல் உணர்ச்சியடையக்கூடும் என்பதும் தூயகாற்றையே தாவரங்கள் விரும்பும் என்பதும், மயக்க மருந்தால் அவை மயங்கும் என்பதும் தெளிவாயிற்று தொட்டாற் சிணுங்கி (Touch me Not), பயோபிட்டம் (Biophytum) தந்திச் செடி (Telegraphic plant)-இவையே ஜகதீசரின் ஆய்வுக்குப் பெரிதும் துணை நின்றன. இச்செடிகள் நுண்ணிய உணர்ச்சிகளையும் புலப்படுத்த வல்லன. இவர் ஆய்வின் முடிபுகளை யெல்லாம் நூல் வடிவில் படங்களுடன் வெளியிட்டார். விஞ்ஞானப் பேருண்மைகளைக் கூர்ந்து உணர்வாரே உணரவல்லர். இயற்கையன்னையின் பல நுட்பங்களைக் கண்டு தெளிவாக்கிய போஸின் கூர்த்த மதி போற்றற்குரியது.

கல்கத்தாவின் நெடுஞ்சாலை யொன்றின் மருங்கில் தழைத்திருந்த நாணலின் ஒரு வகையினை உற்றுநோக்கி உணர்ந்த உண்மை ஜகதீசரைப் பௌதிகத் துறையினின்று நீக்கி உயிரியல் (Biology) துறையில் உய்த்தது. "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்பது முதுமொழி. மைகேல் ஃபேரடே என்பவர் சில சிறு கருவிகளைக் கொண்டு மின்னாற்றலின் வகையெல்லாம் உணர்ந்து வெளியிட்டார். நுட்ப உணர்வும், உள்ள பொருளைப் பயன்படுத்தும் திறனும் வெற்றிக்கு இன்றியமையாதவை. நமது ஜகதீசரும் சில கருவிகளை வைத்துக்கொண்டு, தாவரங்களின் வளர்ச்சி, உணர்ச்சிகள், ஒளிச்சேர்க்கை, ஆகாரத்தைச் செடியின் மேற்பாகத்துக்குச் செலுத்தும் சக்தி—ஆகியவற்றைக் கண்டுணர்ந்தார்

போஸ் தனது 59-ம் வயதில் தான் பெற்ற பொருளின் துணைகொண்டு தன் நீண்டநாள் விருப்பத்துக்கேற்ப போஸ் ஆராய்ச்சி நிலையத்தைத் தோற்றுவித்தார். 'உயிரியல் உலகு' மெச்சுகின்ற மேதை யொருவரது குடும்பத்தில் தோன்றிய (ALDOUS HUXLEY) ஹக்ஸ்லி என்பவர் கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும் சான்றவர் அன்னார் இந்தியா போந்தபோது, ஜகதீசர் தம் ஆய்வுச் சாலையின் பல பகுதிகட்கும் அவரை அழைத்துச் சென்றார். "பல நுண்மை மிக்க கருவிகளையும் அவற்றின் தொழிற்பாட்டையும் விளக்கிய பாங்கு கருத்தினின்று நீங்கவில்லை" என ஹக்ஸ்லி தம் கட்டுரை யொன்றில் குறிக்கின்றார். ஒரு செடியின் வளர்ச்சி நிலைகள் நுட்பமான கருவியொன்றால் புகைபடிந்த கண்ணாடியில் தாமே பதிந்திருந்தன. மின்னாற்றல் செலுத்தத்தப்பெறும் பொழுது அமையும் அதிர்ச்சி, செடி உணவினை உறிஞ்சும் காட்சி, ஆயவைகளும் அக் கண்ணாடியில் காணப்பட்டன.

செடியின் உறுப்புக்களின் அமைப்பில் நிகழும் பல நிகழ்ச்சிகளையும் விரைவிற்குட்படுத்தலாம். ஊக்கும் ஒரு பொருளைச் (Stimulant) சிறிது நீரில் கலந்து அந்நீரைச் செடி கொள்ளுமாயின் விரைவு புலனாகும். இடம் பெயர்த்து அமைக்கப்பெறும் செடிகளில் பல பிழைப்

பதில்லை. மயக்க மருந்து செலுத்தாது அறுவை மருத்துவம் செய்யப் பெறுமேல் அதிர்ச்சியால் மரணம் நிகழ்ந்துவிடும். மயக்க மருந்து செலுத்திப் பெயர்த்த செடிகள் பிழைத்தன. நுண்ணிய அசைவுகளைப் பல ஆயிரம் மடங்கு பெருக்கிக் காட்டும் கருவி (Crescograph) மிகுந்த பயனுடையதாயிருந்தது. இதுகாறும் கண்டறியாத பல நுண்ணிய நிகழ்ச்சிகளை ஜகதீசர் கண்ட கருவிகள் உணர்த்தின. உருப்பெருக்கி (Microscope) நமது கட்புலனின் ஆற்றலைப் பல மடங்கு பெருக்கு கின்றது. ஆனால் ஜகதீசரின் கருவி தாவரங்களின் நுண்ணிய பல நிகழ்ச்சிகளையும், உணர்ச்சிகளையும் தெளிவாகப் புலனாக்குகின்றது

போஸ் தனது சலியாத உழைப்பால் தாவர உலகின் பேருண்மைகளைக் கண்டறிந்தார். அரசாங்கம் அவரைப் போற்றியது. "சர்" பட்டமும் அளித்தது. "ஸி.ஐ.இ.", "ஸி.எஸ்.ஐ." என்ற பட்டங்களும் வழங்கப் பெற்றார். இலண்டன் மாநகரம் சென்ற போஸ் பெருங் கூட்டத்தில் அரிய சொற்பொழிவாற்றி மக்களை மகிழ்வித்தார். ஸ்காட்லாந்தில் உள்ள (ABERDEEN) அபர்டீன் சர்வகலாசாலை அவர்க்குப் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது. ஆங்கில அறிவியல் பேரறிஞர் கழகம் ஜகதீசரை ஓர் உறுப்பினராக ஆக்கியது. இதனின்றும் அவர்தம் பெருமை தெள்ளென விளங்குகின்றது.

கங்கை ஆற்றங்கரையிலும் டார்ஜிலிங் என்ற இடத்திலும் ஆய்வுக் களங்களை நிறுவினார். ஜகதீசர் கண்ட ஆய்வின் முடிபுகள் வியக்கத்தகுந்தன. அவர் தம் புகழ் தாய்நாடு மட்டுமன்றி மேனாட்டிலும் பரவியது. மேலைநாட்டவர் ஜகதீசரை தம் நாடு போந்து சொற்பொழிவாற்ற அழைத்தனர். அழைப்பிற்கிணங்கி போஸ், அமெரிக்கா, ஐரோப்பா, ஸ்காட்லாந்து சென்று விரிவுரையாற்றிப் போற்றுவிக்கப்பட்டார்.

இப்புகழ்சால் அறிஞர் 1937 நவம்பர் 22 ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஜகதீச சந்திர போஸ் தளராத உழைப்பும், பெருமுயற்சியும் உள்ளவர். புதியமுறை ஆய்வுகளில் வெற்றிகண்ட பெரியார். அவர் தம் அரிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து பல ஆராய்ச்சிகட்கு வழி வகுத்தன. அவர் நிறுவிய கல்கத்தாவில் உள்ள "ஆராய்ச்சிக் கழகம்" (BOSE INSTITUTE) இன்றும் பெரும்பணி செய்து வருகிறது. அவர் நினைவாக ஆண்டுதோறும் விரிவுரைகள் ஆற்றி வருகிறது. ஆராய்ச்சிகட்கு உறுதுணை செய்யும் 4500 தொகுதிகள் கொண்ட ஒரு நூல் நிலையமும், தொழிற்சாலையும் அவ்விடம் உள்ளன. உயிரியல் துறையின் பல பிரிவுகளிலும் நுட்பமான ஆய்வு நிகழ்ந்து வருகிறது. ஜகதீசர் புகழ் தம் நாடு மட்டுமன்றி மேனாடுகளிலும் பெரிதாகப் பரவியுள்ளது. அறிஞர் ஜகதீசரின் நினைவும், புகழும் என்றும் நீங்காது நிலைத்திருக்கும்என்பது உறுதி.

பழந் தமிழர் உணவு வகை.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

சாமி. சிதம்பரனார்.

தமிழர்கள் உணவு.

பண்டைத் தமிழர்கள் உண்டு மகிழ்ந்த உணவைப்பற்றி இரு விதமான கருத்துக்கள் உண்டு.

பழந்தமிழர்கள் மரக்கறி வகைகளைத்தான் உண்டு வாழ்ந்தனர்; காய், கனி, கிழங்குகள் தாம் அவர்களுடைய உணவாக இருந்தன; ஆரியர் இந்நாட்டில் குடிபுகுந்தபின்னர்த்தான் தமிழர்களின் உணவில் மாற்றம் ஏற்பட்டது; ஆரியர்கள் வேள்விகளிலே உயிர்ப்பலியிட்டு உண்பதைக் கண்டனர்; தமிழர்களும் அவர்களைப் பார்த்துப் புலால் உண்ணக் கற்றுக்கொண்டனர்; ஆரியர்கள் சோமபானம் அருந்துவதைப் பார்த்துத் தமிழர்களும் மதுபானம் செய்யக் கற்றுக்கொண்டனர்; என்று கூறுவோர் உண்டு.

மற்றொருசாரார், இதை மறுத்துரைப்பார்கள்; பண்டைத் தமிழர்கள் புலாலும் மதுவும் உண்டார்கள்; அவர்களுக்கு அந்நியர் யாரும் கற்றுக்கொடுக்கவில்லை; தமிழகத்தில் மாமிசமும், மதுவும் நிறையக் கிடைத்தன; இவைகளைத் தேடிக்கொண்டு எங்கும் செல்லவேண்டிய கட்டாயம் இல்லை; வலியக் கிடைத்த இவைகளைத் தமிழர்கள் உண்டு மகிழ்ந்தனர்; ஊக்கமுடன் வாழ்க்கை நடத்தினர்; வீரர்களாகச் சிறந்து வாழ்ந்தனர்; பிற்காலத்தில்தான் புலால் உண்பது தவறு, அது உயிர் இரக்கம் அற்ற செயல், புலால் புசிப்பவர்கள் கருணையற்றவர்கள், மது அருந்துவது ஒழுக்கக்கேட்டுக்கு அடிப்படை, அது பஞ்சமா பாதகங்களில் ஒன்று என்ற கொள்கை பரவிற்று; மது, மாமிச விலக்குக் கொள்கை சமண மதம் தமிழகத்திற் பரவிய பிறகுதான் தலையெடுத்தது; என்று இவ்வாறு கூறுகின்றவர்கள் உண்டு.

இந்த இரண்டில் எது முடிவானது; எது தவறானது: என்பதைப்பற்றி நாம் ஆராய்ந்துகொண்டிருக்கவேண்டாம்' பண்டைத் தமிழர்களின் உணவைப்பற்றித் தமிழ் இலக்கியங்களில் காணப்படுவன யாவை? அவர்கள் எவ்வுணவை உண்டனர்? உணவிலே உயர்வு தாழ்வு பாராட்டும் தன்மை பண்டைத் தமிழர்களிடம் இருந்ததா? என்ற செய்திகளைப்பற்றிமட்டும் பார்ப்போம்.

பழந் தமிழ் இலக்கியங்களில் புலால் விலக்கும், மதுவிலக்கும் கூறப்படவில்லை; பண்டைத் தமிழர்கள் இவைகளையே சிறந்த உணவாகக்கொண்டிருந்தனர். உணவுக்கும், உயிர்க் கருணைக்கும் தொடர்பு இருந்ததாகத் தெரியவில்லை. மிகச் சிறந்த அறிஞர்களாக—புலவர்களாகப்—போற்றப்பட்டவர்கள் எல்லாம

மாமிசமும், மதுவும் உண்டு வாழ்ந்தனர். மாமிசமும், மதுவும் உண்பது உயிர்க்கருணைக்கு மாறுனதல்ல; ஒழுக்கத்திற்கு முரணுனதல்ல என்ற கொள்கை நிலவியிருந்த காலத்திற்கூடப் புலால் புசிக்காத தமிழ் மக்களும் இருந்தனர்; அவரவர்கள் வாழும் இடத்தையும், அவர்களுடைய வாழ்க்கை வசதியையும் பொறுத்தே அவர்களுடைய உணவும் அமைந்திருந்தது. இந்த உண்மையையே நாம் பழந்தமிழ் இலக்கியங்களிற் பார்க்கின்றோம்.

மாமிச உணவு வகைகள்.

தமிழர்கள் மான்கறி உண்டதைப் பற்றிப் புறநானூற்றில் காணப்படுகின்றது. வன்பரணர் என்ற புலவரும், அவர் சுற்றத்தாரும் வழிநடை வருத்தத்தால் ஒரு பலாமரத்தின் அடியிலே சோர்ந்து கிடந்தனர்; அப்பொழுது அங்கு வந்த கண்டீரக்கோப் பெருநற்கிள்ளி என்பவன் அப்புலவரைக் கண்டான். வேட்டைக்கு வந்த அவன், தனது ஆட்களைவிட்டுத் தனியாக அவ்விடத்தை அடைந்தான். அவன் புலவரைக் கண்டவுடன் வேட்டையாடிய மான் கறியைத் தீயிலே சுட்டான்; தன்னுடைய வேலைக்காரர்கள் வருவதற்குமுன், அதைப் புலவருக்கும், அவர் சுற்றத்தாருக்கும் உண்ணக்கொடுத்தான். இதைப் புறநானூற்றின் 150வது பாடலால் காணலாம்.

இழுதின் அன்ன வால்நிணக் கொழுங்குறை,
கான்அதர் மயங்கிய இளைஞர் வல்லே
தாம்வந்து எய்தா அளவை, ஒய்எனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டு, 'நின்
இரும்பேர் ஒக்கலொடு தின்ம்' எனத் தருதலின்,
அமிழ்தின் மிசைந்து, காய்பசி நீங்கி,
நன்மரன் நளிய நறும்தண் சாரல்
கல்மிசை அருவி தண்எனப் பருகி,
விடுத்தல் தொடங்கினேன்.

"நெய்யைப்போன்ற வெண்மையான கொழுப்பான தசையை அவன் எடுத்தான்; காட்டிலே வழிதவறிச் சென்ற பணியாளர்கள் விரைந்து வந்து கூடுவதற்கு முன்பே, சட்டென்று, தீக்கடைகோலால் உண்டாக்கிய நெருப்பிலே சுட்டு எடுத்தான். 'உன்னுடைய பெரிய உறவினருடன் உண்ணுக' என்று கொடுத்தான்; ஆதலின் அமுதத்தைப்போல அந்த சூட்டிறைச்சியை உண்டேன்; துன்புறுத்திய பசியிலிருந்து விடுதலையடைந்தேன். நல்ல மரங்கள் செறிந்த அந்தக் குளிர்ச்சியான மலைச்சாரலிலே விழும் குளிர்ந்த அருவி நீரை அள்ளிப் பருகினேன்; குறித்த இடத்தை நோக்கிச் சுற்றத்துடன் நடக்கத் தொடங்கினேன்."

இதுவே அப் புறநானூற்றுப் பாடற் பகுதி. இதில் வள்ளல் மான்கறி விருந்திட்டதையும், புலவர் அதை உண்டதையும் காண்கிறோம்.

புறவுக் கருஅன்ன புன்புல வரகின்
பால்பெய் புன்கம் தேனொடு மயக்கிக்
குறுமுயல் கொழும்சூடு கிழித்த ஒக்கலொடு
இரத்தி நீடிய அகன்தலை மன்றத்துக்
கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு
அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன்
எம்கோன் வளவன் வாழ்க.

"புறாவின் கருவைப்போன்ற வரகு; புன்செய் நிலத்திலே விளைந்த வரகு. பால் ஊற்றிச் சமைத்த அந்த வரகஞ்சோற்றை தேனோடு கலந்து, கொழுத்த சிறிய முயலின் சூட்டிறைச்சியுடன் உண்பவர் என் உறவினர். அவர்கள் இவ்வுணவை, இலவமரம் உயர்ந்து வளர்ந்திருக்கின்ற மன்றத்திலே உட்கார்ந்து, கள்ளமறியாத உள்ளத்துடன் பேசி மகிழ்ந்து மிகுந்த சோற்றை உண்பார்கள். இத்தகைய பாணர்களுக்குத் தனது செல்வம் முழுவதையும் அளிக்கின்றவன் எமது அரசனாகிய சோழ மன்னன்."

இது புறநானூற்றின் 34-வது பாட்டு. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்னும் சோழ மன்னனை ஆலத்தூர் கிழார் என்னும் புலவர் பாடியது. இதனாலும் தமிழர்கள் புலால் உண்டதை - முயற்கறி உண்டதைக் காணலாம்.

தூராஅய் துற்றிய துருவைஅம் புழுக்கின்
பராரை வேவைப் பருகுஎனத் தண்டி;
காழின் சுட்ட கோழ்ஊன் கொழுங்குறை
ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி.

அறுகம்புல்லை மேய்ந்து கொழுத்த செம்மறியாட்டின் மாமிசத்தை வேகவைப்பர்; அதன் தொடையின் மேற்பாகத்துக் கறியை எடுத்துக்கொடுத்துத் தின்னச்சொல்லி வற்புறுத்துவர்; இரும்புக் கம்பியாலே கோத்துச் சுட்டு எடுத்த கொழுத்த ஊன் துண்டத்தை வாயிலே போட்டுக்கொண்டு அதன் சூட்டைத் தாங்க முடியாமல் இந்தக் கடைவாய்க்கும், அந்தக் கடைவாய்க்குமாகத் தள்ளித் தள்ளித் தின்போம்."

இது பத்துப் பாட்டுப் பொருநர் ஆற்றுப்படை; இதனால் தமிழர்கள் செம்மறியாட்டுக் கறியை விரும்பி உண்டதைக் காணலாம்.

புளிச் சுவை.

பண்டைத் தமிழர்கள் புளிவிட்டுச் சமைத்த கறியை விரும்பி உண்டனர். புளிச்சுவை தமிழர் போற்றிய சுவைகளிற் சிறந்ததாகும். மரக்கறி வகைகளேயும் புளியிட்டுச் சமைத்து உண்டனர். மாமிச உணவையும்கூடங் புளியிட்டுச் சமைத்து உண்டனர்.

புளியிட்டுச் சமைத்த உணவின் இனிமையைக் குறுந்தொகைப் பாட்டு ஒன்று, படிப்போர் நாவில் நீர் கொட்டும்படி எடுத்துரைக்கின்றது.

> முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
> கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்,
> குவளை உண்கண் குய்ப்புகை கமழத்,
> தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்,
> 'இனிது எனக்' கணவன் உண்டலின்,
> நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

என்பதே அப்பாடல். இது குறுந்தொகையில் 167-வது பாட்டு.

கணவனிடம் மாறாத காதலுள்ள கற்புடை மங்கை ஒருத்தி. அவள் கணவனுக்காகச் சமைத்தாள்; பரிமாறினள்; காதலன் அதனை உண்டான்; என்ற செய்தியைக் கூறுகிறது இப்பாடல்.

"காந்தள் போன்ற மெல்லிய விரல்களால், கட்டித் தயிரைப் பிசைந்தாள்; கையைக் கழுவிக்கொள்ளாமலே, நழுவிய, துவைத்த தூய்மையான ஆடையை உடுத்திக்கொண்டாள். குவளைமலர் போன்ற அவளுடைய கண்களிலே, தாளித்ததனல் குய்யென்ற ஒலியுடன் எழுந்த புகை சூழ்ந்தது. அதனல் வருந்தினள்; ஆயினும் காந்திப் போகாமல் நன்றாகக் கிளறிப் புளி ஊற்றிய குழம்பை வைத்தாள். அதைக் கணவனுக்குப் பரிமாறினள். அவன் மிகவும் சுவையுள்ளது என்று சொல்லிக்கொண்டு ஆவலுடன் உண்டான்; அதைக்கண்டு அவள் முகமலர்ச்சி அடைந்தாள்." என்பதுதான் இச்செய்யுளில் அமைந்துள்ள பொருள்.

செம்புற்று ஈயலின் இன்அளைப் புளித்து.

செம்புற்றிலே தோன்றிய ஈசலே, இனிய மோருடன் கலந்து புளியும் விட்டுச் சமைத்த புளிக்கறியை உடையது" என்பது புறநானூறு – பாட்டு 119. இதனல் ஈசலே, மோரும், புளியும் விட்டுச் சமைத்துண்ணும் பழக்கம் பண்டைத் தமிழரிடம் இருந்ததைக் காணலாம்.

மேலே காட்டிய குறுந்தொகைப் பாட்டும், புறநானூற்று அடியும், தமிழர்கள் புளியிட்டுச் சமைத்த கறியை விரும்பியுண்டனர் என்பதை அறிவித்தன.

மதுபானம்.

மாமிசத்தை - புலாலை அவர்கள் விரும்பி உண்டதுபோலவே மதுவையும் அருந்தி மகிழ்ந்தனர்.

யவனர் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கு இனிது ஒழுகு மதி;

இவ்வாறு இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்னும் பாண்டியனைக், கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்னும் புலவர் வாழ்த்துகிறார். "யவனர்கள், கெட்டுப்போகாத நல்ல கலத்திலே கொண்டுவந்து கொடுத்த சுகந்த மணம் வீசும் மதுவை உண்டு மகிழ்கின்றனை. அதனை ஒளிபொருந்திய வளையலை அணிந்த மங்கையர்கள், பொன் கலத்திலே ஊற்றி ஏந்தித்தருகின்றனர்; அந்த இனிய மதுவை வாங்கி உண்டு, நீ மகிழ்ச்சியுடன் வாழ்கின்றாய்" என்பதே இதன் பொருள்.

இழைஅணி வனப்பின் இன்னகை மகளிர்
போக்குஇல் பொலங்கலம் நிறையப், பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
ஆர உண்டு பேர்அஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை

என்பது பொருநர் ஆற்றுப்படை. "நல்ல நகைகளை அணிந்த மகளிர்; இனிமையான புன்சிரிப்புடன் விளங்கும் மகளிர். ஒளி குன்றாத பொற் கிண்ணத்திலே மதுவை ஊற்றி ஊற்றிக் கொடுப்பார்கள். அவர்கள் கொடுக்கக் கொடுக்க நாங்கள் வாங்கி வாங்கி வழிநடை வருத்தந்தீர உண்போம்; மகிழ்ந்து நிற்போம்." இதுவே மேலே காட்டிய அடிகளின் கருத்து.

மேலே காட்டிய புறநானூற்று அடிகளும், பொருநர் ஆற்றுப்படை அடிகளும், தமிழர்கள் மதுவை வெறுக்கவில்லை; விரும்பி உண்டனர்; விருந்தினர்களுக்கும் கொடுத்துப் போற்றினர்; என்பதை உணர்த்தின.

கபிலரும் ஔவையாரும்.

பண்டைத் தமிழகத்தில் பார்ப்பனர்களும் மது மாமிசத்தை வெறுக்கவில்லை; சிறந்த உணவாகக் கொண்டனர். இவ்வுண்மையைப் "புலன் அழுக்கற்ற அந்தணாளன்" என்று போற்றப்பட்ட கபிலர் வரலாறு காட்டுகின்றது.

சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பவனைக் கபிலர் சந்திக்கின்றார். அவன் கபிலர் கையைப் பிடித்துக் குலுக்கினான். கபிலர் கை பூப்போல் மென்மையாக இருந்தது.

இதற்குக் காரணம் யாது என்று அவன் கேட்டான். அதற்குக் கபிலர் கூறிய விடை குறிப்பிடத்தக்கது.

“நீ போரிலே யானையை இழுத்துப் பிடிக்கின்றாய்; குதிரைகளை அடக்கி ஓட்டுகின்றாய்; வில்லிலே அம்பு பூட்டிப் பகைவர்மேல் விடுகின்றாய்; பரிசிலர்களுக்கு அணிகலன்களை வாரி வாரி வழங்குகின்றாய்; இவைகளால் உன் கை காய்ச்சிப்போய் வன்மையடைந்திருக்கின்றது. உன்னைப்பாடும் எனது கை, ஊனும், கறியும், துவையலும், சோறும் அள்ளி உண்பதைத் தவிர வேறு தொழிலை அறியாது. ஆதலின் எனது கை மென்மையாக இருக்கின்றது” என்று கூறினார். இச் செய்தியைப் புறநானூற்றின் 14-வது பாடலில் காணலாம்.

இதே கபிலர், பாரி மாண்டபின் பறம்பு மலையைக் குறித்துப் புலம்புகின்றார்.

மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டு ஆன்று ஆனுக் கொழுந்துவை ஊன்சோறும்
பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னே முன்னே

என்று பாடுகின்றார். “கள்ளமைந்த பாண்டத்தின் வாயைத் திறந்து அதனை அளிப்பார் பலர்; ஆட்டுக் கடாவை வெட்டிக் கறிசமைத்து நிறைந்த கொழுப்பும், துவையலும், ஊனும், சோறும் வேண்டிய அளவு கொடுப்பார்கள். இத்தகைய சிறந்த வளம் நிறைந்து விளங்கினை முன்பு; அப்பொழுதுதான் நானும் உன்னுடன் நட்புச் செய்தேன்” என்று கூறி வருந்தினார் கபிலர்.

இதனால் கபிலர் மதுவும் மாமிசமும் உண்டு மகிழ்ந்ததைக் கண்டோம்.

அதியமான் நெடுமான் அஞ்சி இறந்துபோனான். அத்துயரம் தாங்கமுடியாமல் ஔவையார் புலம்புகின்றார்.

சிறியகள் பெறினே எமக்கு ஈயும் மன்னே;
பெறிய கள் பெறினே
யாம்பாடத் தாம் மகிழ்ந்து உண்ணும் மன்னே;
சிறுசோற்றானும் நனிபல கலத்தன் மன்னே;
பெருஞ்சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே;
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே;
அம்பொடு வேல் நுழை வழியெல்லாம் தான்நிற்கும்
மன்னே.

“கொஞ்சம் கள் பெற்றால் அது முழுவதையும் எனக்கே கொடுத்துவிடுவான்; மிகுதியாகக் கிடைத்தால், யாம்பாட எமக்கும் கொடுத்துத் தானும் உண்பான்; கொஞ்சம் சோறு இருந்

தாலும் பலரோடு பகிர்ந்து உண்பான்; மிகுந்த சோறுஇருந்தால் மிகப் பலருடன் கூடி உண்பான்; எலும்பும் சதையும் கலந்த விருந்துள்ள இடங்களையெல்லாம் எமக்கு அளிப்பான்; அம்பும், வேலும் நுழைகின்ற போர்க்களங்களில் எல்லாம் தானேசென்று பகைவர்களை எதிர்த்து நிற்பான்.''

இது புறநானூற்றின் 235வது பாட்டு. இதனுல் ஔவையாரும் புலாலும் மதுவும் உண்டு மகிழ்ந்தவர் என்பதைக் காணலாம்.

மேலே காட்டிய கபிலர், ஔவையார் பாடல்கள் தமிழர்கள் உணவைக் குறித்த உண்மைகளை உணர்த்தின.

புலால் உண்ணுதவர்கள்.

புலால் உண்ணுத பார்ப்பார்கள் தமிழகத்தில் இருந்தனர்; புலால் உண்ணுத வேளாளர்களும் தமிழகத்தில் இருந்தனர். இச் செய்திகள் பத்துப்பாட்டில் காணப்படுகின்றன.

மறைகாப் பாளர் உறைபதிச் சேப்பின்
பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையும் கற்பின், நறுநுதல்
வளைக்கை மகடூஉ வயின்அறிந்து அட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தம்
சேதா நறுமோர் வெண்ணெயின், மாதுளத்து
உருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சகம் நறுமுறி அளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கின் அறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்

என்பது பெரும்பாண் ஆற்றுப்படை. இதில் பார்ப்பார் உண்ணும் உணவும், அவர்கள் விருந்தினர்க்கு இடும் உணவும் காணப்படுகின்றன.

“பார்ப்பார் வாழும் இடத்திற்குப் போனல் அருந்ததிபோன்ற கற்புள்ள பார்ப்பனப் பெண்களால் சமைக்கப்பட்ட பால்சோறு, பருப்புச்சோறு, முதலியவற்றைப் பெறுவீர்கள்; இராஜன்னம் என்ற பெயர்பெற்ற உயர்ந்த நெற்சோறு கிடைக்கும்; மாதுளம் பிஞ்சைப் பிளந்து மிளகுப் பொடி, கருவேப்பிலைகளைக் கலந்து பசுவெண்ணெயிலே வேகவைத்த பொரியல் கிடைக்கும். நல்ல வடுமாங்காய் அகப்படும். இன்னும் தயிர்ச்சாதம், மாங்காய்ச் சோறு, புளியஞ்சாதம் முதலியவைகளும் கிடைக்கும். இத்தகைய பலவகை உணவுகளைப் பெறுவீர்கள்.'' இதுவே மேலே காட்டிய அடிகளின் பொருள்.

இதே பெரும்பாணாற்றுப்படையிலே வேளாளர் உணவுப் குறிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் சைவ வேளாளர்களும் இருந்தனர் என்பதை அறிகின்றோம்.

"குளிர்ந்த மருத நிலத்திலே வாழும் உழவர்களின் சிறந்த இல்லத்திலே சென்று தங்குவீர்களானால் இனிப்பான சுளைகள் நிரம்பிய பெரிய பலாப்பழம் கிடைக்கும்; நல்ல இனிமையான இளநீர் பெறுவீர்கள்; யானைக் கொம்புகளைப்போல வளைந்து தாரிலேயே பழுத்திருக்கும் வாழைப்பழங்கள் கிடைக்கும். நல்ல பனைநுங்கு கிடைக்கும்; இன்னும் பலவகையான பண்டங்களும் கிடைக்கும்; சேப்பம் இலையோடு, முதிர்ந்த நல்ல கிழங்கும் கிடைக்கும்" என்று கூறப்பட்டுள்ளது. இதனை

தண்டலை உழவர் தனிமனைச் சேப்பின்
தாழ்கோள் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்,
வீழ்இல் தாழைக் குழவித் தீநீர்,
கவைமுலை இரும்பிடிக் கவுண்மருப்பு ஏய்க்கும்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்,
திரள்அரைப் பெண்ணை நுங்கொடு, பிறவும்
தீம்பல் தாரம், முனையின் சேம்பின்
முளைப்புறம் முதிர் கிழங்கு ஆர்குவிர்;

என்ற அடிகளால் காணலாம்.

வேளாளர்களிலே - உழவர்களிலே - சைவர்கள் இருந்தனர்; மாமிசம் உண்ணாதவர்கள இருந்தனர். இச்செய்தியைப் பட்டினப் பாலையும் கூறுகின்றது.

"கொலை செய்யாதவர்கள்; களவு செய்யாதவர்கள்; தேவர்களை வணங்குவார்கள்; அவர்களுக்கு வேள்வியிலே ஆவுதி கொடுப்பார்கள்; நல்ல பசு, எருதுகளைப் பேணுவார்கள்; நான்கு வேதங்களையும் கற்றறிந்தவர்களின் புகழைப் பரவச்செய்வார்கள்; விருந்தினர்களுக்குப் பல பண்டங்களையும் கொடுப்பார்கள்; சிறந்த நல்லொழுக்கத்தைப் பின்பற்றி நடப்பார்கள்; மேழிச் செல்வமே சிறந்ததென்று அதை விரும்பிப் பாதுகாப்பார்கள்" என்று கூறப்பட்டுள்ளது. இதனை

கொலைகடிந்தும், களவு நீக்கியும்,
அமரர்ப் பேணியும், ஆவுதி அருத்தியும்,
நல் ஆனொடு பகடு ஓம்பியும்,
நான்மறையோர் புகழ் பரப்பியும்,
பண்ணியம் அட்டியும், பசுபதம்கொடுத்தும்,
புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை,
கொடுமேழி நசை உழவர்

என்ற அடிகளால் அறியலாம்.

உணவால் உயர்வு தாழ்வில்லை.

பண்டைத் தமிழகத்தில் மேற்காட்டியவாறு புலால் உண்போரும் இருந்தனர்; மரக்கறி உண்போரும் இருந்தனர். ஆனால் அவர்களுக்குள் உணவு காரணமாக உயர்வு தாழ்வுகள் இருந்தனவென்று தெரியவில்லை. மேலே காட்டிய பெரும்பாணாற்றுப் படையினால் இவ்வுண்மையைக் காணலாம்.

பாணர்கள் புலால் உணவை வெறுத்தவர்கள் அல்லர். கிடைத்தால் மதுவையும் விட்டுக்கொடுக்கமாட்டார்கள். இவர்கள் பார்ப்பனர்களின் மனையில் தங்கினாலும் அவர்களால் வரவேற்று விருந்திடப்படுவார்கள்; வேளாளர்கள் மனையில் சென்றாலும் அவர்களாலும் வரவேற்று விருந்திடப்படுவார்கள். இச் செய்தியைப் பெரும்பாண் ஆற்றுப்படை கூறியிருக்கின்றது. இதனால், உணவு காரணமாக உயர்வு தாழ்வு பாராட்டும் வழக்கம் பண்டைத் தமிழகத்தில் இல்லை என்பதை அறியலாம்.

புலால் மறுத்தலும், மதுவிலக்கும் தமிழகத்தில் சமண சமயம் பரவியபின்தான் ஏற்பட்டன என்பதில் ஐயம் இல்லை. திருக்குறளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் புலாலும், மதுவும், பாவத்திற்கிடமானவை என்று கூறப்படவில்லை. திருக்குறளிலும், அதனை அடுத்துத் தோன்றிய பதினெண்கீழ்க் கணக்கு நூல்களிலுந்தான் புலாலும் மதுவும் மிகுதியாக வெறுக்கப்படுகின்றன.

சைவ, வைணவ மதங்களும், அம்மதங்களின் பெரியார்களும் இக்கொள்கையை ஏற்றுக்கொண்டனர். புலால் உண்ணல் பாவச் செயல்; கருணையற்ற செயல்; இரக்கமற்ற செயல்; என்று ஒப்புக்கொண்டனர்.

புலன் அடக்கத்தை விரும்புகின்றவர்கள், அறிவு மாறுபட்டுத் தீயொழுக்கத்தில் செல்லாமல் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றவர்கள், புலாலையும் மதுவையும் வெறுத்தனர்.

பத்துப்பாட்டுக் காலத்திலே தமிழகத்திலே சமண மதம் பரவியிருந்தது; ஆதலால் அக்காலம் புலால் உணவை வெறுத்த ஆரம்பகாலம் என்று கூறிவிடலாம்.

இதுவரையிலும் கூறியவைகளைக்கொண்டு பண்டைத் தமிழ் மக்களின் உணவு வகைகளைப்பற்றி அறியலாம். பழந் தமிழ் மக்கள் பலவகைப்பட்ட புலால் உணவுகளைச் சமைத்து உண்டனர். மரக்கறி வகைகளையும் உண்டனர். தமிழர்களுக்குப் புளியிட்ட உணவிலே விருப்பம் அதிகம். சமண மதம் பரவிய பின் மரக்கறி உண்போரும் தமிழகத்தில் தோன்றினர். புலால் உண்ணாத பார்ப்பார்கள், வேளாளர்கள் தோன்றினர். அக்

அறிஞர் ஆராய்க.

புறநானூற்றுள் ஒரு பாட்டு.

திரு. அடிகளாசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி.

புறநானூற்றுள் 'இளையோர் சூடார்' (242) என்று தொடங்கும் பாட்டு, ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ் சாத்தனைக் குடவாயில் கீரத்தனார் (பி-ம். குடவாயில் நல்லாதனார்) பாடியதாகும் இப்பாட்டு பெருஞ்சாத்தன் இறந்தபொழுது கீரத்தனாரால் பாடப்பட்டது. இதற்கடுத்த பாட்டு "இனி நினைந் திரக்க மாகின்று" என்று தொடங்கும் அழகிய பாட்டாகும். இப்பாட்டின் அடியில் 'அவனைத் தொடித்தலை விழுத்தண்டினார் பாடியது' என்கின்ற குறிப்பு, டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர்கள் பதிப்பித்த புறநானூற்று முதற் பதிப்பிலும், இரண்டாம் பதிப்பிலும் காணப்படுகின்றது. ஆனால், மூன்றும் பதிப்பிலும் நான்காம் பதிப்பிலும் 'அவனை' என்பதை நீக்கிவிட்டுத் 'தொடித்தலை விழுத்தண்டினார் பாடியது' என்ற குறிப்பு காணப்படுகின்றது. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் உரை எழுதிப் பதிப்பித்த புறநானூற்றுள் "அவனைத் தொடித் தலை விழுத்தண்டினார் பாடியது' என்ற குறிப்பே காணப்படு கின்றது. ராவ்சாகிப். S. வையாபுரிப் பிள்ளையவர்கள், புலவர் வரிசையில் தொகுத்த சங்க இலக்கியத்தில் 'தொடித்தலை விழுத்தண் டினார் பாடியது' என்று காணப்படுகின்றது.

ஆனால், ஐயரவர்கள் பதிப்பித்த புறநானூற்றுள், பாடினோர் வரலாற்றில், தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் தலைப்பில் 'இவரால் பாடப்பட்டோன் ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன்' என்ற குறிப்பு முதற் பதிப்பிலிருந்து எல்லாப் பதிப்புக்களிலும் காணப்படுகின்றது. அங்ஙனமிருக்க, மூன்றும் பதிப்பு, நான்காம் பதிப்புகளில் பிரதிபேதம் கூடக் காட்டாமல் 'தொடித்தலை விழுத் தண்டினார் பாடியது' என்று பாட்டின் அடியில் குறிப்பு எழுதப் பட்டிருப்பது நமக்கே வியப்பாயுள்ளது.

[261ஆம் பக்கத் தொடர்ச்சி]

காலத்தில் உணவு காரணமாக உயர்வு தாழ்வுகள் இல்லை. மாமிசம் உண்டோரும், மரக்கறி உண்டோரும் ஒத்த பெருமையுள்ளவர்களாகத்தான் கருதப்பட்டனர். மரக்கறி உண்போர் உயர்ந்தவர், மாமிசம் உண்போர் இழிந்தவர் என்ற வேற்றுமை பிற்காலத்தில் தான் தமிழகத்தில் தோன்றியது. இவ்வுண்மைகளை நமக்குப் பண்டைத் தமிழ்நூல்கள் உணர்த்துகின்றன.

குறிப்பு :— இக்கட்டுரையின் நோக்கம் பண்டைத் தமிழ் மக்களின் நாகரிகத்தை எடுத்துக்காட்டுவதுதான். மாமிச உணவு சிறந்தது; அல்லது மரக்கறி உணவுதான் சிறந்தது; என்று வழக்கிடும் கருத்துடையதன்று. உணவு தனிப்பட்ட மக்களைப் பொறுத்தது. அவரவர்கள் விரும்பும் உணவு அவரவர்களுக்குச் சிறந்ததாகும்.

தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் ஆரும் நூற்பாவுரையுள் 'பேராசிரியர்' "தொடித்தலை ....எமக்கே" என்பது தன்கண் தோன்றிய மூப்புப் பொருளாக இளிவரல் பிறந்தது; என்னை? இளமைக் காலத்துச் செய்தன செய்யமாட்டாது இளிவந்தனம் இக்காலத்து என்றமையின்" என்று எழுதியுள்ளதைப் பார்த்து, அவ்வுரையுள் "தன்கட் டோன்றிய மூப்பு' என்று ஒருமை மொழி வந்துள்ளதால், தொடித்தலை விழுத்தண்டினாரே தனது மூப்பைப் பற்றிப் பாடியுள்ளார் என்று கருதி, 'அவனைத் தொடித்தலை விழுத் தண்டினார் பாடியது' என்றிருப்பது பிழையென் றெண்ணி 'அவனை' நீக்கிவிட்டுத் 'தொடித்தலை விழுத்தண்டினார் பாடியது' என்று பதிப்பித்தார் போலும். ஐயரவர்கள் பிழை என்று கருதுவதைப் பிரதி பேதமாகக் காட்டுதல் பெரும்பாலும் இல்லை.

'அவனைத் தொடித்தலை விழுத்தண்டினார் பாடியது' என்றிருப் பதே தக்கதென்று கருதினால், இங்கே, 'அவன்' என்னும் சொல் லால் குறிக்கப்படுவோன் பெருஞ் சாத்தனன்றே; பாட்டுடைத் தலைவனாகிய அவனுக்கு இப்பாட்டில் என்ன செய்தி உள்ளது? என்று நமக்குள் வினா எழுகின்றது நாம் சிறிது இப்பாட்டை ஊன்றிப் பார்த்தால் பெருஞ்சாத்தனுக்குச் செய்தியிருப்பது நன்கு புலனாகும். 'பெரு மூதாளரேன் ஆகிய எமக்கே' என்று இப்பாட்டு தன்மை ஒருமையில் இல்லை. படர்க்கையாரை உளப்படுத்தும் 'ஏம்' விகுதிபெற்று 'பெரு மூதாளரேம் ஆகிய எமக்கே' என்று தன்மைப் பன்மையில் உள்ளது. அதனால் புலவர் பெருஞ்சாத்தனையும் தன்னோடு சேர்த்துக்கொண்டே இப்பாட்டைப் பாடியுள்ளார் என்பது புலனாகின்றது.

தொடித்தலை விழுத்தண்டினாரும் பெருஞ்சாத்தனும் ஒத்த வயதினராவார். ஓரூரினர் ஆவார். இவர் இளையராய் இருந்தபொழுது அவனும் இளையனாய் இருந்தான். இருவரும் சேர்ந்து விளையாடினர். இருவரும் தண்கயமாடும் மகளிரொடு கைபிணைந்து தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி மாயமில் ஆயமொடு மருதத் துறையுறத் தாழ்ந்த நீர் நணிப் படிகோடேறி கரையவர் மருளத் திரையகம் பிதிர நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து குளித்து மணற் கொண்டனர். அத்தகைய கல்லா இளமையைப் பெற்றிருந்த இருவரும் இப்பொழுது மிக முதியராயினர். அம் முதுமையால் தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்று இருமல் இடைமிடைந்த சில சொல்லையுடையராயினர். இந் நிகழ்ச்சியைத்தான் "மிக முதுமையடைந்த யானும், பெருஞ்சாத்தனுமாகிய எங்களுக்கு இப்பொழுது நினைந்து இரக்க மாகின்றது: எங்கள் கல்லா இளமை யாண்டுண்டு கொல்லோ" என்று புலவர் தன் நண்பனையும் உளப்படுத்திக் கூறுகின்றார். பாட்டின் பொருளுணர்ந்து உரை எழுதுவதில் வல்ல புறநானூற்று உரையாசிரியரும் இப்பாட்டில் வந்துள்ள 'எமக்கு' என்னும் சொல்லுக்கு எமக்கென்றே உரை எழுதிவிடாமல் 'எங்களுக்கு' என்று உரை எழுதிச் செல்வதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

'பெரு மூதாளரேம் ஆகிய எமக்கே' என்பதை ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியாகக் கொள்ளலாமே எனின், 'அவனைத் தொடித்தலை விழுத்தண்டினார் பாடியது' என்னும் குறிப்பு இப் பாட்டுக்கு இல்லையாயின் கொள்ளலாம். அக்குறிப்பு இருக்கும் பொழுது அதற்கியையத்தானே பொருள் கொள்ளவேண்டும்?

பெருஞ் சாத்தனுக்குரியதாகப் புறநானூற்றுள் இரண்டு பாடல்கள் காணப்படுகின்றன. 'இனி நினைந் திரக்க மாகின்று' என்ற பாட்டு, அவன் மிக முதுமையுற்றிருந்தபொழுது அவனைக் காணச் சென்ற அவன் நண்பரும் மிக முதியருமாகிய தொடித்தலை விழுத் தண்டினாரால் பாடப்பட்டது இப்பாட்டில் புலவர் தன் முதுமை, அவன் முதுமை என்னும் இரண்டையும் சேர்த்துப் பாடியுள்ளார். 'இளையோர் சூடார்' என்னும் பாட்டு பெருஞ்சாத்தன் இறந்த பொழுது குடவாயில் கீரத்தனாரால் பாடப்பட்டதாகும்.

ஆனால், ஐயரவர்கள் பதிப்பித்த புறநானூற்றுள் பாடப் பட்டோர் வரலாற்றில் 'ஒல்லையூர் கிழான்மகன் பெருஞ்சாத்தன்' என்னும் தலைப்பின்கீழ் "இவன் வீரர்க்கும் பாணர்க்கும் விறலியர்க்கும் பேருதவி புரிந்தோன்; இவன் இறந்த பின்பு பிரிவாற்றாது பாடிய புலவர் குடவாயிற் கீரத்தனார், தொடித்தலை விழுத்தண்டினார். இவன் பெயர் சாத்தன் என்றும் வழங்கும்" என்று எழுதப்பட்டுள்ளது.

பெருஞ்சாத்தன் முதுமையுற்றிருந்த பொழுது தொடித்தலை விழுத்தண்டினார் பாடிய 'இனி நினைந்திரக்க மாகின்று' என்ற பாட்டுத்தான் புறநானூற்றுள் உள்ளது. அவன் இறந்தபொழுது பிரிவாற்றாது அவர் பாடிய பாட்டொன்றும் புறநானூற்றுள் இல்லை ஒருகால், 'இளையோர் சூடார்' என்னும் பாட்டுக்கும் 'இனி நினைந் திரக்க மாகின்று" என்னும் பாட்டுக்கும் துறை 'கையறு நிலை' யாகவே கூறப்பட்டிருப்பது கொண்டு அங்ஙனம் துணியப்பட்டது போலும். இத்தகைய ஐயம் நிகழும் என்பதையறிந்த புறநானூற் றுரையாசிரியர் 'இளமை கழிந்து இரங்கிக் கூறுதலால் இதுவும் கையறு நிலையாயிற்று' என்று எழுதியிருப்பது ஈண்டு உணரத் தக்கதாம். இத்தகைய மாறுபாடு புறநானூற்றுப் பதிப்புள் பல உள்ளன.

> "இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
> நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
> பாணன் சூடான் பாடினி யணியாள்
> ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த
> வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
> முல்லையும் பூத்தியோ வொல்லையூர் நாட்டே". புறம். 242.

திணையும் துறையுமவை, ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனைக் குடவாயிற் கீரத்தனார் பாடியது (திணை — பொதுவியல்: துறை— கையறு நிலை).

243 "இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே".

திணையும் துறையுமவை.

அவனைத் தொடித்தலை விழுத்தண்டினுர் பாடியது.

'இனி நினைந்து' என்னும் பாட்டுக்குத் திருவாளர் துரைசாமிப் பிள்ளையவர்கள் எழுதிய விளக்கம் கீழே காண்க. 'ஒல்லையூர் கிழான் மகனுன பெருஞ்சாத்தன் பேரிளையனுய் இருந்த காலத்தில் ஒருகால் தொடித்தலை விழுத்தண்டினுர் என்னுஞ் சான்ருேர் அவனைக் காணச் சென்ருர். சாத்தனும் அவரை மிக்க அன்புடன் வரவேற்று இனிமை மிகப் பேசி அளவளாவினுன். வேறு பல சான்ருேரும் அங்கே கூடியிருந்தனர். அக்கூட்டத்தில் இளமையின் வளமைபற்றிப் பேச்சுண்டாயிற்று. இளமையிற் சிறந்த வளமை இல்லாமையும், அக்காலத்தே இளைஞர் உள்ளம் இன்பக் களியாட்டில் பெரிதும் ஈடுபடும் திறமும் பிறவும் விரிய ஆராயப்பட்டன. அக்கூட்டத்திருந்த சான்ருேருள் தொடித்தலை விழுத்தண்டினுரும் வேறு சிலரும் மிக்க முதியராய் இருந்தனர். முதுமையிலும் கழிந்த இளமைபற்றி அவரையுள்ளிட்ட சான்ருேர் வளமையுறப் பேசுவது எல்லோர்க்கும் இன்பத்தை யுண்டுபண்ணிற்று. முடிவிலே நம் தொடித்தலை விழுத்தண்டினுர் இளமைச் செய்கைகளை ஒருவகையால் தொகுத்துரைப்பாராய், மறையும் மாயமும் அறியாத இளையரொடு கூடி நீரிற் பாவை வைத்து விளையாடியதும் நெடுநீர்க் குட்டங்களில் குதித்து மணல் காட்டி மகிழ்ந்ததும், பிறவும் கூறி, இத்தகைய இளமை இப்போது எங்கோ சென்று ஒளிந்துவிட்டது; இப்போது அது கழிந்துவிடவே, மேனியில் நடுக்கமும் இருமல் கலந்த சொல்லும் தண்டூன்றியல்லது நடவாத தளர்ச்சியும் உடைய முதியராளுேம். யாம் இப்போது இளமையை நினைப்பின் நெஞ்சில் இரக்கம் உண்டாகின்றது" என்பவர் இதனையே ஒரு பாட்டின்கண் வைத்துப் பாடினுர். அப்பாட்டே இது.

தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டாராய்ச்சி.

S. திருஞானசம்பந்தன் M. A.,
வரலாற்று விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

8. தேவாரம் என்னும் பெயர் வழக்கு.

சைவ சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் ஆகிய மூவரும் தலங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டுப் பாடியருளிய திருப்பதிகங்கள் இக்காலத்தில் தேவாரம் என்று வழங்கப்படுகின்றன. அவை, சோழ மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தேவாரம் என்று வழங்கவில்லை. கட்டுரையாளர் தமிழ்ப்பொழில் 33-ஆம் துணர் 256-ஆம் பக்கத்தில்,

"முதலாம் இராசராசன் காலத்திலேயே மூவர் பதிகங்களுக்குத் தேவாரம் என்னும் வழக்குண்டு என்பது 'தேவாரதேவராக எழுந்தருளுவித்ததேவர்' என்னும் கல்வெட்டுப் பகுதி இதற்கு சான்ருகும். தேவாரதேவர் என்பதற்குக் கல்வெட்டுத் துறையில் நுண்மாண் நுழைபுலம் பெற்றிருந்த டாக்டர் திரு. உல்ஷ் துரை 'தேவாரத்தைச் சொல்லி வணங்கிய கடவுள்' என்று பொருள் எழுதியிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது"

என வரைந்துள்ளனர்.

கட்டுரையாளரின் கருத்து உண்மைக்கு முரணுயிருத்தலால் ஈண்டு ஆராய்தற்குரியதாகும்.

முதல் இராசராசசோழன் தஞ்சைப்பெரியகோயிலில் இறைவன் திருமுன் நாள்தோறும் திருப்பதிகம் பாடும் பொருட்டு நாற்பத்தெட்டுப் பேர்களை நியமனஞ்செய்து, ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்குத் தொண்ணூறு கலநெல் நிவந்தமாக அளித்த செய்தி அக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டால் [1] புலப்படுகிறது. அக்கல்வெட்டில் திருப்பதிகம் என்ற பெயர்தான் காணப்படுகிறது; தேவாரம் என்னும் பெயர் காணப்படவில்லை. அவ்வேந்தனுக்கு முன்னரும் பின்னரும் ஆட்சி புரிந்த சோழமன்னர்களும் திருக்கோயில்களில் திருப்பதிகம் பாடுவதற்குப் பல ஊர்களில் நிவந்தங்கள் வழங்கியுள்ளனர். அக்கல்வெட்டுக்களிலும் திருப்பதிகங்களுக்குத் தேவாரம் என்ற பெயர் குறிக்கப்படவில்லை. எனவே, சோழரது ஆட்சிக் காலத்தில் மூவர் பதிகங்களுக்குத் தேவாரம் என்னும் பெயர் வழங்கவில்லை என்பது தெள்ளிது.

ஆனுல், கி. பி. பதினென்று, பன்னிரண்டாம் நூற்ருண்டுகளில் பொறிக்கப்பெற்ற சோழ அரசர்களின் கல்வெட்டுக்களில் தேவாரம் என்னும் சொல் காணப்படுகிறது. எனவே, அச்சொல் எப்பொருளில் வந்துள்ளது என்பது ஆராய்தற்குரியதாகும்.

---

1. South Indian Inscriptions Vol. II, No. 38.

முதல் இராசராச சோழனது ஆட்சியின் 29-ஆம் ஆண்டில் தஞ்சைப்பெரியகோயிலில் வரையப்பெற்றுள்ள 'பெரியபெருமாளுக்குத் தேவார தேவராக எழுந்தருளுவித்ததேவர் பாதாதிகேசாந்தம் ஐவிரலே இரண்டுதோரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தமும் உடையவராகக் கனமாகப் பித்தளையால் எழுந்தருளுவித்த சந்திரசேகரதேவர் திருமேனி ஒன்று' என்ற கல்வெட்டுப் பகுதியில் [2] தேவாரம் என்னும் சொல் பயின்று வருதல் காணலாம். அக்கோயில் ஸ்ரீகாரியம் செய்துவந்த அதிகாரியாகிய பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியன் தென்னவன் மூவேந்தவேளான் என்பான் முதல் இராசராசசோழன் படிமத்தையும் அவனுடைய வழிபடு கடவுளாகிய சந்திரசேகரமூர்த்தியின் திருமேனியையும் அங்கு எழுந்தருளுவித்த செய்தியைத்தான் இக் கல்வெட்டுப் பகுதி அறிவிக்கின்றது. இதில் வரும் தேவாரதேவர் என்ற தொடர் வழிபடு கடவுள் என்னும் பொருளில் வந்துளது. சென்னைப்பல்கலைக்கழகத் தமிழகராதியில் இத்தொடர்க்கு 'ஆன்மார்த்த பூசைக்குரிய மூர்த்தம்' என்று பொருள் குறித்திருப்பதும் இக்கருத்தையே வலியுறுத்துதல் காணலாம். எனவே, இத்தொடரிலுள்ள தேவாரம் என்ற சொல் மூவர்பதிகங்களைக் குறிக்கவில்லை என்பதும் வழிபாடு என்னும் பொருளில் வந்துளது என்பதும் அறியத்தக்கனவாம்.

தஞ்சைப் பெரியகோயிலிலுள்ள முதல் இராசேந்திரசோழன் கல்வெட்டொன்றில் [3] 'கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்துத் தேவாரத்துச் சுற்றுக்கல்லூரி' என்னும் பகுதி காணப்படுகிறது. இதிலுள்ள கோயில் என்பது அரசனது அரண்மனையையும், தேவாரம் என்பது அதிலுள்ள அவனது வழிபடு கடவுள் பூசை அறையையும், கல்லூரி என்பது அதனைச்சூழ்ந்துள்ள தாழ்வாரத்தையும் உணர்த்துகின்றன.

திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள அவ்வூர்க் கல்வெட்டொன்றில் [4] 'உறையூர்க்கூற்றத்துத்திருவடகுடி மகாதேவர் ஸ்தானமடம் தேவாரத்துக்குத் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்யும் அம்பலத்தாடி திருநாவுக்கரையனுக்கும் இவன் வர்க்கத்தாருக்கும் தான நிமித்தமாகக் கொடுத்தோம் மடபோகமாக நித்தம் தூணி நெல் கொள்ளச் சொன்னோம்' எனவும்,

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருக்களர்க் கல்வெட்டொன்றில் [5] நம் தேவாரத்துக்குத் திருப்பதியம் பாடும் பெரியான் மறைதேடும் பொருளான அகளங்கப்பிரியனுக்கும் ...... வம்சத்தார்க்கும் காணியாக ...... செய்யக்கடவன எல்லாம் ...... செய்யப்பண்ணி இப்படிக்

2. S. I. I., Vol. II, No. 38.
3. S. I. I., Vol. II, No. 20.
4. Ibid, Vol. VIII, No. 675.
5. Ibid, No. 260.

கல் வெட்டப்பண்ணுக' எனவும் போதரும் கல்வெட்டுப் பகுதிகளில் தேவாரம் என்ற சொல் வருதல் காணலாம். இவ்விரு கல்வெட்டுக்களும் திருக்கோயிலைச்சார்ந்த மடத்திலும் அரசனது அரண்மனையிலும் நடைபெற்றுவந்த நாள் வழிபாடுகளில் திருப்பதிகம் பாடியவர் இருவர் பெயர்களையும் அவர்களுக்கு அளித்த நிவந்தங்களையும் கூறுகின்றன. இக்கல்வெட்டுக்களிலுள்ள தேவாரம் என்ற சொல் வழிபாடு என்னும் பொருளில் வந்துள்ளமை காணலாம். அன்றியும், 'தேவாரத்துக்குத் திருப்பதியம்' என்ற தொடரே தேவாரம் வேறு திருப்பதிகம் வேறு என்பதை நன்கு புலப்படுத்துதல் அறியத்தக்கது.

முதல் குலோத்துங்க சோழன் கி. பி. 1110-ஆம் ஆண்டில் தொண்டை நாட்டிலுள்ள தக்கோலத்தில் திருவூறல் இறைவனை வழிபட்ட நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் கல்வெட்டொன்று,[6] 'திருவூறல் பெருமானைத் 'தேவாரஞ்செய்து' என்று குறிப்பிடுகின்றது.

கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டின் இடைப் பகுதியில் திருமுனைப்பாடி நாட்டில் அரசாண்ட பல்லவ மன்னன் முதல் கோப்பெருஞ்சிங்கனைப்புகழும் கல்வெட்டுப்பாடல் ஒன்று,[7]

'விளங்கு செம்பொனின் அம்பலக் கூத்து நீ விரும்பிய தேவாரம்
பின்னிகாவல அவனி நாராயண பேணு செந்தமிழ் வர்ழப்
பிறந்த காடவ கோப்பெருஞ்சிங்க நின் பெருமையார் புகழ்வாரே'

என்று கூறுகின்றது. இவ்விரு கல்வெட்டுகளிலும் வரும் தேவாரம் என்னும் சொல் வழிபாடு என்று பொருள்படுதல் உணரற்பாலது.

முதல் இராசேந்திர சோழனது ஆட்சிக்காலத்தில் நாங்கூருடையான் பதஞ்சலி பிடாரன் என்பவன் தேவாரநாயகம் செய்பவனுயிருந்தான் என்று கும்பகோணம் தாலூகாவில் மானம்பாடி என்ற ஊரிலுள்ள கல்வெட்டொன்று[8] அறிவிக்கின்றது. தேவாரநாயகம் என்பான், அரசன் நாள்தோறும் அரண்மனையில் நடத்திய வழிபடு கடவுள் பூசையில் அதற்குரிய பணிகளைச் செய்துவந்த பணிமக்களைக் கண்காணிக்கும் அலுவல் பார்த்துக் கொண்டிருந்த ஓர் அதிகாரி யாவன். எனவே, அரசனது நாள்வழிபாட்டிற்குரிய பணிகளை மேற்பார்க்குந்தலைவன் என்பதே அத்தொடரின் பொருள். ஆகவே, தேவாரநாயகம் என்போன் சிலர் கருதுவது போல, சிவன்கோயில்களில் திருப்பதிகம் பாடுவோரை மட்டும் கண்காணிப்பவன் அல்லன். கோயில்களில் நடைபெற்ற நாள்வழிபாடு முதலான எல்லாவற்றையும் அரசனது ஆணையின்படி ஸ்ரீகாரியஞ்செய்து வந்த அதிகாரியே முற்காலத்தில் மேற்பார்த்துவந்தனன். அவனே திருப்பதிகம் பாடுவோரையும் கண்காணிக்கும் கடமையுடையவனுதலின் அதற்குத்

---

6. Annual Report on South Indian Epigraphy for 1920–21, part II, para 33.
7. Epigraphia Indica, Vol. XXIII, No. 27.
8. Ins. 97 of 1932.

தனியாக ஓர் அதிகாரி வேண்டியதில்லை என்பது தெள்ளிது ஆகவே, தேவாரநாயகம் என்ற தொடரில் 'தேவாரம்' என்பது வழிபாடு என்னும் பொருளில் வந்துள்ளமை காணலாம்.

இதுகாறும் விளக்கியவாற்ருல் சோழர்களின் கல்வெட்டுக்களில் பயின்றுவரும் தேவாரம் என்னுஞ் சொல் மூவர்களின் பதிகங்களை உணர்த்தவில்லை என்பதும், அது வழிபாடு என்ற பொருளில் வந்துளது என்பதும், தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டிலுள்ள 'தேவாரதேவர்' என்னுந் தொடர் வழிபடு கடவுள் என்ற பொருளில் வந்துளது என்பதும் நன்கு துணியப்படும்.

இனி, ஒன்பதாம் திருமுறையாசிரியர்கள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகிய பெரியோர்கள் தம் நூல்களில் தேவாரம் என்னுஞ் சொல்லைக் குறித்தாரில்லை. சேக்கிழாரடிகளும் அச்சொல்லைத் தம் பெரிய புராணத்தில் எடுத்தாளவில்லை. ஆகவே, சைவப் பெருமக்களாகிய அவர்கள் காலங்களில் மூவர்களின் பாடல்கள் தேவாரம் என்று வழங்கவில்லை என்பது தெள்ளிது.

கி. பி. பதினுன்காம் நூற்ருண்டின் முதற் பகுதியிலிருந்த கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியர் தம் கோயிற் புராணத்தில், 'தப்பற் றுயர்தவ மூவா யிரவர்கள் தாவா மறையொடு தேவாரங் கைப்பற் றியபணி முற்றப் புலிமுனி கழலான் விழவெழு தொழில் செய்வான்' எனவும்; அந்நூற்ருண்டின் இடைப் பகுதியிலிருந்த புலவர் பெருமக்களாகிய இரட்டையர்கள் தம் ஏகாம்பரநாதர் உலாவில்,

'மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்'

எனவும்; கூறியிருத்தலால் அவர்கள் காலங்களிலும் தேவாரம் என்ற சொல் வழிபாடு என்னும் பொருளில் வழங்கியுள்ளமை அறியத் தக்கது. ஆகவே, கல்வெட்டுக்களால் அறியப்பெற்ற இப்பொருள் நூல் வழக்காலும் உறுதியெய்துதல் உணரற்பாலதாகும்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

இசைத் தமிழ்ப் பண்கள் விளக்கம்.

சங்கீதம், ப. சுந்தரேசன், குடந்தை.

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே)

இசைத் தமிழின் முதன்முறையில், குரலுக்குக் கிளை இளியாகும். இளிமுதலாக முதலைந்திசை நிரல், இளி - தாரம் - குரல் - துத்தம் உழை என நிற்கும். இவையிற்றின் அலகுகள்,

இளியிருந்து தாரம் ஐந்தலகுகள்
தாரமிருந்து குரல் நான்கலகுகள்
குரலிருந்து துத்தம் நான்கலகுகள்
துத்தமிருந்து உழை ஐந்தலகுகள்
உழையிருந்து மீண்டும் இளி நான்கலகுகள்

இதனையடைப்பினுட்காட்ட, முதலிசையை வட்டக் கோடிட்டுக் காண்டல்வேண்டும்.

பழங்காலப் பெயர்		பண் எ	தற்காலப் பெயர்.
இளிப்பண்		இடைக்காலப் பெயர். தனுசி	சுத்ததன்யாசி அல்லது உதயரவிச்சந்திரிகா
ந-ம் கிளை நிரல்	அலகுகள்	தற்காலச் சுருதிப் பெயர்கள்	தற்கால இசைப்பெயர்கள்
இளி	0	ஆதார சுருதி	ஷட்ஜம்
தாரம்	ரு	ஐந்து சுருதிகள் இதனைச்சேர்த்து	சாதாரண காந்தாரம்
குரல்	ச	ஒன்பது சுருதிகள் இதனைச்சேர்த்து	சுத்தமத்யமம்
துத்தம்	ச	பதின்மூன்று சுருதிகள் இதனைச்சேர்த்து	பஞ்சமம்
உழை	ரு	பதினெட்டுச் சுருதிகள் இதனையும்சேர்த்து	கைசிகிநிஷாதம்
மேனிலை இளி	ச	இருபத்திரண்டு சுருதிகள்	மேனிலைத் தாரஷட்ஜம்

இளி	-	தாரம்	-	குரல்	-	துத்தம்	-	உழை
0	-	ரு	-	ச	-	ச		ரு

இந்நிரல், முதலேந்திசையமைப்பில் ஐந்தாமமைப்பாகும், இனி, முறைப்படி தற்காலப் பெயர்களுடன் அட்டவணைப் படுத்துவாம். இவ்வாறமைந்த இளிப்பண், இடைக்காலத்தில் தனுசி எனப்பட்டு தற்காலத்தில் நம் தென்னிந்திய இசைமுறையில் சுத்ததன்யாசி அல்லது உதயரவிச்சந்திரிகா எனப்படுவது நன்கறியலாம். இந்த ஐந்திசைகளோடு கைக்கிளை விளரியைச் சேர்க்க இவ்வாறமை

பழங்காலப் பெயர்		பண் அ	தற்காலப் பெயர்
இளிப்பெரும் பண் — கோடிப்பாலே		இடைக்காலப் பெயர்கள் பற்பல	கரஹரப்பிரியா
நடம் கிளை நிரல்	அலகு கள்	தற்காலச் சுருதிப் பெயர்கள்	தற்கால இசைப் பெயர்கள்
இளி	0	ஆதார சுருதி	ஷட்ஜம்
விளரி	ச	நான்கு சுருதிகள் இதனைச்சேர்த்து	சதுச்ருதிருஷபம்
தாரம்	க	ஐந்து சுருதிகள் இதனைச்சேர்த்து	சாதாரண காந்தாரம்
குரல்	ச	ஒன்பது சுருதிகள் இதனைச்சேர்த்து	சுத்தமத்யமம்
துத்தம்	ச	பதின்மூன்று சுருதிகள் இதனைச்சேர்த்து	பஞ்சமம்
கைக்கிளை	ச	பதினேழு சுருதிகள் இதனைச்சேர்த்து	சதுச்ருதிதைவதம்
உழை	க	பதினெட்டு சுருதிகள் இதனையும்சேர்த்து	கைசிகிநிஷாதம்
மேனிலே இளி	ச	இருபத்திரண்டு சுருதிகள்	மேனிலேத் தாரஷட்ஜம்

வுறும். அது, இளி - விளரி - தாரம் - குரல் - துத்தம் கைக்கிளை - உழை என்பதாம். இதனையலகுபடுத்த,

இளி	- விளரி	- தாரம்	- குரல்	- துத்தம்	- கைக்கிளை	- உழை
0	ச	க	ச	ச	ச	க

என நிற்கும். இந்நிரல், பண்டைய பேரியாழ்க்கருவியில் சம நிலையில் ஆறுமிசை முதலாகக் காணப்பெற்றதாகும். அவ்வாறு காணப்பெற்றமையினுலே ஒவ்வொரு நிலையிலும் ஆறுமிசை யமைப்பு அதாவது பழையதார முறையில் இளிமுறையாயிற்று. இதனைப் பண்டையோர் தனிமுறையாகக்கொண்டு இளிமுறை எனவும் தனித்து நிறுவினர். பிற்காலத்தில் இம்முறை இளிக் கிரமம எனப்பட்டு ஷ-ஜக்கிராமம் எனப் பெயர்பெற்றதென்பர். இவ்வேழிசை முறைகளைத் தற்காலப் பெயர்களுடன் அட்டவணைப் படுத்துவாம். பண்டைய இளிமுறைக்கும் இடைக்கால பிற்கால இளிமுறைக்கும் சிற்சில வேறுபாடுமுண்டு.

ஆகவே பண்டைய இளிப்பெரும் பண்ணுகிய கோடிப்பாலை தற்காலம் எழுபத்திரண்டு மேளகர்த்தா இராக வரிசைகளில் இருபத்திரண்டு எண்பெற்று கரஹரப்பிரியா என வழங்கி வருவது கண்கூடாயிற்று. ஹரப்பிரியா என்ற ஒரு பண்ணைப் பெயரளவில், அது இருபத்திரண்டு என்ற எண்ணைக்கொண்டமையால் வடமொழி வழக்குப்பற்றி –க– முதலாக வரும் எழுத்தில் இரண்டாமெழுத்தாகிய க, எனும் எழுத்தினையும் –ய– முதலாக வரும் எழுத்தில் இரண்டாமெழுத்தாம் –ர– என்ற எழுத்தினையும் சேர்த்து கர ஆக்கிப் பின்னர் ஹரப்பிரியாவினைச் சேர்த்து கரஹரப்பிரியா என்றனர். இவையாவும் பெயரளவில் மட்டும் மாறுபாடென்பதை உணரவேண்டும்.

இத்தகைய பழைய கோடிப்பாலை, பேரியாழில் நன்குணர்ந்த பின்னர் மருதயாழ் என்ற கருவியில் தனித்து நரம்புகளைக் கட்டி யமைத்தும் நன்கு அறியப்பட்டது.

இப்பாலை, பண்டைய தாரக் கிரமத்தில் இளி குரலாய கோடிப்பாலையெனவும் குரற்கிரமத்தில் தாரங்குரலாய கோடிப் பாலையெனவும், இளிக்கிரமத்தில் உழைகுரலாய கோடிப்பாலை யெனவும் நன்கறியப்பட்டது இவ்வாறுன ஓர் அரிய முறை பற்றி வந்த உழைகுரலாய கோடிப்பாலையே செம்முறைக்கேள்வி எனப்பட்ட சகோடயாழில் கட்டப்பெற்ற முதற்பண்ணுகும்.

சகோடயாழ்க் கருவியில் உழை முதலாகக் கோடிப்பாலையை அமைத்துப் பின் உழைக்குக்கிளையாகிய குரலை அக்கருவியில்

ஓர்ந்துணர்ந்தமையினாலே வரும் அலகுமுறைகளை, அக்கால இசைத்தமிழ்ப் புலவர்களால்,

"குரல்துத்தம் நான்கு கிளைமூன் றிரண்டாங்
குரையா உழையிளி நான்கு—விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற்ற வர்"

எனக் கூறப்பெற்றது. இக்கருத்துகள் பலவேயாயினும் ஓரளவே இக்கட்டுரையின் வாயிலாக விளக்குவேம். நாம் இதுகாறும் விளக்கிக்கொண்டு வரும் ஐந்திசைகளையும் ஏழிசைகளையும் ஒருங்கு சேர்த்துப் பன்னிரண்டு இசைகளெனக்கொண்டு ஒரு வகையில் பன்னிருபாலை முறையை பழந்தமிழர்கள் கண்டிருந் தனர். அப்பகுதி தனித்தே விளக்கப் பெறுதல்வேண்டும்.

அம்முறையில் இளிமுதலாக எடுக்க,

இளி	—	நான்கு அலகுகள்	
விளரி	—	மூன்று ,,	
தாரம்	—	இரண்டு ,,	
குரல்	—	நான்கு ,,	
துத்தம்	—	நான்கு ,,	
கைக்கிளை	—	மூன்று ,,	
உழை	—	இரண்டு ,,	எனநிற்கும்.

இவ்வமைப்பினைக் குரல் முதலாக எடுக்க,

குரல்	—	நான்கு அலகுகள	
துத்தம்	—	நான்கு ,,	
கைக்கிளை	—	மூன்று ,,	
உழை	—	இரண்டு ,,	
இளி	—	நான்கு ,,	
விளரி	—	மூன்று ,,	
தாரம்	—	இரண்டு ,,	எனவமையும்.

ஆதலானே, மேற்கூறிய "குரல் துத்தம் நான்கு................" எனும் இசைத்தமிழ் வெண்பா, பன்னிருபாலையிலே இளிக்கிரமத்திலே இளிமுதலாக வமைந்த அலகுநிலைகளை குரல்முதலாகக் கொண்டால் எவ்வமைப்பு வரக்கூடுமோ, அவ்வமைப்பினைத் தெளிவுபெறக் கூறப்பெற்றதாகும்.

இதே கருத்தினை,

"குரலே துத்த மிளியிவை நான்கும்
விளரி கைக்கிளை யும் மூன்றாகித்
தளராத் தாரம் உழையிவை யீரிரண்
டெனவெழு மென்ப வறிந்திசி னோரே"

எனவும் பண்டைய நூற்பாவொன்று நன்கு விளக்கிச் சென்றது.

அற்ப உவமையில் அரிய பொருள்.

(வித்துவான். திரு. முத்து-கண்ணப்பன், பி, ஏ., எம். எல். சி.)

ஓர் அழகிய ஆறு; அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது. ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ரேரின் உள்ளம் போலத் தெளிவாக இருக்கிறது அதன் நீர். கரையில் ஒரு பால் வண்ணக் கொக்கு ஆடாமல் அசையாமல் சிலைபோல நிற்கிறது. சிறியனவும் பெரியனவுமான எண்ணிறந்த மீன்கள் அதன் காலடி வழியே அங்கு மிங்குமாக ஓடி உலவிக்கொண்டிருக்கின்றன. ஆனாலும் கொக்கு கொஞ்சமும் அசையவே இல்லை. "ஒருவேளை கல்லாய்ச் சமைந்து விட்டதோ! இல்லை தூங்குகிறது போலும்! ஆனால் கண்கள் திறந்தே இருக்கின்றனவே! எனினும் இமைகள் அசைவதாகத் தெரிய வில்லையே! திறந்து கொண்டே தூங்குகிறது போலும்! அறி துயிலோ? இல்லையென்ருல் ஏன் இவ்வளவு நேரமாக ஆயிரக்கணக் கான மீன்கள் அதன் கால்களைத் தொட்டுக் கொண்டும், முட்டிக் கொண்டும் ஓடிக்கொண்டிருந்தாலும் வாளாவிருக்கிறதே!" என்று இப்படியெல்லாம் சந்தேக அலைகள் மோதிக்கொண்டிருக்கின்றன காண்போரின் உள்ளங்களில்.

என்ன விந்தை! அடுத்த விடிைடியில் 'திடும்' என ஒரு மீனைக் குத்தி யெடுத்துக் குதூகலமாக விழுங்குகின்றதே! கொக்கின் திறமையே திறமை! என்னே அதன் சூழ்ச்சி!

273-ம் பக்கத் தொடர்ச்சி.

ஆக, பண்டைய தாரமுறையிற் றேன்றிய இளி முதலான அலகு வகைகள், இளிக்கு அலகுகள் நான்கே யாதலான், பன்னிரு பாலை முறைப்படியும் இளிக்கு அலகுகள் நான்கேயாயிற்று. அடுத்த விளரிக்கு அலகுகள், பழைய முறையில் நான்கும் பிந்திய முறையில் மூன்றுமாக மாறுபாடெய்தியது. இதுபோன்றே பழையமுறைப்படி குரல் நான்கலகையும், துத்தம் நான்கலகையும் கொண்டது. பிந்திய முறையில் இவை மாறவில்லை. கைக்கிளை, பழைய முறையில் நான்கு அலகுகொண்டிருந்தது: பிந்திய முறையில் மூன்றல கினைக்கொண்டது. உழையும் தாரமும் பழைய முறையில் ஒவ்வோரலகினைக் கொண்டு விளங்கிற்று; பிந்திய முறையில் இவை இரண்டிரண்டு அலகுகளைக்கொண்டன. ஏனெனில் பண்டைய முறையில் இயல்பாகவிருந்த, விளரிக்குள்ள நான்கலகினையும் கைக்கிளைக்குள்ள நான்கலகினையும், அதனதற் கடுத்த, அதாவது—விளரியிலிருந்து ஓரலகை விளரிக்கடுத்த தாரத்திற்குக்கொடுத்தும், அதேபோன்று கைக்கிளையிலிருந்து ஓரலகினை கைக்கிளைக்கடுத்த உழைக்கு ஏற்றியும் செய்த மாற்று முறை மிகவும் பழைய முறையாயிற்று. இம்மாறுபாடே மிக விரிந்து வழக்கில் இருந்த காலத்தே எழுந்த நூற்பாக்களே, நம் அடியார்க்கு நல்லாரால் மேற்கோள்களாகக் காட்டப்பெறும் நூற்பாக்களாகும். (தொடரும்)

தன் அலகு கொள்ளும் அளவு மீன் – தன் கழுத்துத் தாங்கும் கனமுள்ள மீன் – தனக்கேற்ற இனிய மீன் வரும் வரையில் வாளா விருந்தது. வந்தவுடனே விரைந்து குத்தி விடாது பற்றி விழுங்கி மகிழ்ந்து வெற்றி கண்டது.

இவ்வாறே, நீர் நிலைகளின் கரைகளிலே வாளாவிருந்து உரிய மீன் அருகில் வந்ததும் விடாது பற்றி விழுங்கி நிற்கும் நுண்ணறிவு படைத்த வெண்ணிறக் கொக்கின் வியத்தகு காட்சியில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்திருக்கிறார் ஔவையார்.

— மடைத்தலையில்

ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு

என்பது அக்காட்சியைக் கண்டதும் ஔவையின் எண்ணத்திலிருந்து உருப்பெற்றெழுந்த எழுத்தோவியம்!

இவ்வொப்பற்ற உவமை மூலம் அரசனுக்கு அறிவு கொளுத்து கிறார் நமது குறள் முனிவர்.

'மாற்றானை வெல்லத் தக்க காலம் வரும் வரையில் கொக்கெனக் கூம்பி எதனையும் பொருட்படுத்தாது அமைக! உரிய காலம் உற்ற வுடனே அதனைத் தப்பாமற் பற்றித் தாழாது தாக்கிக் கொன்று வென்று வாழ்க' என்பதே அவ்வரிய அறிவுரை.

"கொக் கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து"—

இடனறிதல் 490.

நாயனார் அரசர்க்கே ஓதுகின்றார் எனினும் இவ்வறிவுரை அனை வர்க்குமே பொருந்து மன்றோ?

(சீர்த்த இடத்து — சிறந்த இடத்தில்; தான் நினைத்த செயல் முடியும் காலம் வாய்த்த்விடத்து. கூம்பும் பருவம்—தொழிலின் மேல் செல்லாதிருக்க வேண்டிய காலம். குத்து — கொத்தி எடுத்துக் கொள்ளல்.)

இவ்வரிய உவமைக்கும், பொருளுக்கும் சிறந்த விளக்கம் தரு வது போன்றிருக்கிறது, இதற்கு முன்னுள்ள

"எய்தற் கரிய(து) இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்"

என்ற குறட்பா தக்க காலம் வந்து வாய்க்குமானால், அவ்வாய்ப்பை அக்கணமே பயன்படுத்திக்கொண்டு செயற்கரியகாரியங்களை விரைந்து செய்து முடித்துக்கொள்ளல் வேண்டும் என்ற நுண் கருத்தை யன்றோ அக்குறளில் அழகுற அமைத்துக் கூறியுள்ளார் தேவர்!

அரிய நீதியைச் சுருங்க—ஆனால் மிக மிகத் தெளிவுபட—முன் குறளில் கூறி, அந் நீதி மறவாமல், மங்காமல், மாயாமல் மனத் தகத்தே படிந்து நிலைத்து நிற்கும் வண்ணம் அடுத்த குறளில் ஒப்

பற்ற உவமை வாயிலாக விளக்கியுள்ள பொய்யில் புலவரின் நுண் மாண் நுழை புலத்தின் ஆற்றல் அளவிடற்பாலதோ?

கொக்கின் குணத்தினையும், தன்மையினையும் கூர்த்தறிந்த நாயனாரின் நுணுகிய நோக்குக் கோட்டானிடத்தும் காக்கையிடத்தும் கூடப் பாய்ந்திருக்கிறது!

ஓங்கி உயர்ந்து, முற்றி முதிர்ந்து நிற்கிறது ஒரு மரம். அதில் ஒரு பொந்து. பயங்கரமான சிற்றுருவம் ஒன்று அப்பொந்திலிருந்து தலையைச் சற்று வெளியில் நீட்டி உடனே உள்ளுக்கிழுத்துக் கொள்ளுகிறது.

சிறிது நேரத்தில் பகல் மாறிக் காரிருள் உலகத்தைக் கவிந்து கொள்கிறது. 'வீர்' என அப்பொந்தினின்றும் வெளிக் கிளம்பிப் பயங்கரமான குரலெழுப்பிப் பறந்து செல்கிறது. அம் மரத்தையும் சுற்றுப்புறத்தையும் சுற்றிச் சுற்றி ஆர்ப்பரிக்கிறது. ஆம்; அது கொடுமைக் குரல் எழுப்பும் கோட்டான்தான்! அவ்வடங்காப்பிடாரிக் கோட்டானின் அடாத செயலால், பேய்க்கூத்தால், பகலெல்லாம் பாடுபட்டு உழைத்துண்டு ஓய்வுபெற அடங்கிக் கிடக்கும் காக்கைகள் எல்லாம் கலைகின்றன. நிலை கலங்கித் தவிக்கின்றன. அவ்வொரே கோட்டான் அச்சோலையிலுள்ள காக்கைக் கூட்டங்களையெல்லாம் சிதற அடித்துச் சித்திரவதை செய்கிறது. என்னே அதன் வலிமை! வன்மை!

அப் பயங்கர இருளையோட்டப் பகலவன் விரைந்து வெளிப் படுகிறான். அப் பாதகக் கோட்டான் வலியொடுங்கி அப்பொந்தின் பக்கல் பதுங்கி நிற்கிறது. சுற்றுமுற்றும் பார்க்கிறது. அப்பொந்து கூட அதற்குப் புலனாகவில்லைபோலும். ஆம், கோட்டானுக்குப் பகலிற் பார்வை மங்கலல்லவா?

சிறிது நேரத்தில் அருகிலிருந்து சிறகடித்துச் சீறிப் பறந்து வருகிறது இரவெல்லாம் இன்னலடைந்த ஒரு காக்கை.

ஆத்திரத்தோடு அக் கோட்டானைக் குத்திக் குலைத்துக் கொன்று வஞ்சம் தீர்த்துக்கொள்கிறது.

இவ்வரிய உவமையின் மூலம் மாற்றாரை வென்று வாகை சூடக் கருதும் மன்னன் அதற்கு ஏற்ற காலத்தே அவ்வினையைச் செய்து முடித்தல் வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது"—குறள் 481. கால மறிதல்.

(கூகை—கோட்டான்; இகல்—பகை; பொழுது—ஏற்றகாலம்.)

(காகம் தன்னினும் வலிமைமிக்க கோட்டானைப் பகற் பொழுதில் வென்றுவிடும்; அஃதேபோல் பகையை வெல்லக்கருதும் மன்னருக்கும் அதற்குரிய காலம் வேண்டும் என்பதே இக்குறளின் பொருளாகும்.

இங்ஙனம், வள்ளுவர் மன்னர்க்கு அறிவுறுத்தும் வாயிலாய் மக்கட்குமன்றே அறிவுறுத்துகிறார்!

சென்ற இதழின் தொடர்ச்சி

தொல்காப்பியம்

சேனாவரையருரை விளக்கம்.

[பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு]

"கொடுப்பன யாவை.........பெயரன்மை யறிக"

என்பது "கானந்தகைப்ப செலவு" (கலிப்பா உ) என்பதன் கண்வரும் 'தகைப்ப' என்பது வினையாக இருத்தலாலதனை யெடுத்துக்காட்டுதல் பொருந்தும் "நாடினர் கொயலவேண்டா நயந்து தாங்கொடுப்பபோல்" (கலிப்பா உ௰அ) என்பதன்கண் வரும் 'கொடுப்பபோல்' என்பது வினையாலணையும் பெயராகத் தோன்றுதலாலதனை யெடுத்துக்காட்டுதல் பொருந்துமா? இங்குக் குறிப்பிடும் ஈறுகளெல்லாம் வினையீறுகளன்றே, வினையாலணையும் பெயர்கட்கும் வினையீறுகளே வருமாயினும் வினைகட்கு வினைகளையே யெடுத்துக் காட்டுதல் தானே பொருந்தும் என்பாரை நோக்கி, "கொடுப்ப போல்" என்பது அப்பாட்டுள் வரும் "கதுப்புப் போல்" என்பது போலக் கொடுக்குஞ்சினைகள்போல என உவமையாகிப் பிறவற்றை விளக்க வராமல் அச்சினைகளையே கொடுப்பனவாகக் குறித்து நிற்றலால் 'கொடுப்ப' என்பது வினையேயாகுமென்கின்றது. இஃது "ஊட்டியன்ன ஒண்டளிர்ச் செயலை" என்பதுபோலத் தற்குறிப்பேற்றமாய் நின்றது. உவமையாக நிற்கவில்லை.

"அன்பெறுது... உரைக்க, உரைக்கவே...வகரவீறேயாம்"

என்பன 'அஆவ' எனப் பலவறி சொல்லினிறுதி நிலைகள் மூன்றெனக் கூறப்பட்டன. வகர இறுதியை அகர இறுதியிலடக்கி வகரவொற்றைக் காலம் பற்றி வந்த இடைநிலையெழுத்தெனக் கொண்டு பலவறிசொல்லின் இறுதி நிலைகள் 'அஆ' என இரண்டெனக் கூறினாலென்னை? என்பாரை நோக்கி, வகரவொற்றைக் காலம் பற்றி வந்தவெழுத்தெனக் கொள்ளின், அது, காலம்பற்றிய எழுத்துக்கள் முதனிலைக் கேற்ப வேறுபட்டுவரல்போல வராமல் எல்லா முதனிலைக் கண்ணும் குகரத்தை முன்னிட்டு வருதலானும் குகரம் பெறுதலால் அன்சாரியை பெறுதற்கேலாமையானும் அகரத்துடன் கூடி ஒரே வகர உயிர் மெய்யிறுதியாக நின்று பலவின்பாலையும் காலத்தையுங் காட்டுதலானும் அதனுண்மை துணிந்து அகர விறுதியுளடக்காது வகர இறுதியென வேறுகொண்டு 'அஆவ' எனப்பலவறி சொல்லினிறுதி நிலைகள் மூன்றென்றனர் ஆசிரியர். ஆதலால் உண்குவ உறங்குவ என்பன முதலியன வகர இறுதி நிலையையுடையனவேயாகுமென்கின்றன.

"வருவ செல்வ.............. என்பது"

என்பது குகரச்சாரியை பெருதவிடத்து, அன்சாரியை பெருத அகரவீறும் வகரவீறும் ஒரே தன்மையனவாகக் காணப்படுதலால் அவ்வாறு வரும்பொழுது அகரவீறெனக்கொள்ளல் வேண்டுமா வகரவீறெனக் கொள்ளல் வேண்டுமா எவ்வீறெனக் கொள்ளுதல் வேண்டுமெனில்—இரண்டீறும் எல்லா முதனிலைக் கண்ணும் வருந் தன்மையுடையனவாதலால் இரண்டீறுங்கொள்ளற் பாலனவேயாம் என்கின்றது. குகரம் பெறும் வழி வகரவீறெனவும் அன்சாரியை பெறும் வழி அகரவீறெனவும் குகரமும் அன்னும் பெருத வழி இரண்டீறெனவும் கொள்ளல்வேண்டுமென்பதாம்.

"வரும் என்னுமுகரம் விகார வகையானீண்டு நின்றது"

என்பது இன்னிசைப் பொருட்டோ சொல்லிசைப் பொருட்டோ நீண்டளபெடாமல், "அஆவவென வரூஉமிறுதி" எனவரிற் செய்யுளோசை சிதைதலால், அது சிதையாமலிருத்தற்பொருட்டு "நீட்டும் வழி நீட்டலும்" (தொல்—சொல்—எச்) என்பதனுல் உகரம் ஊகாரமாக நீட்ட நீண்டு அளபெடுத்து நின்றது. என்கின் றது. விகாரம் — செய்யுள் விகாரம். விகார வகையால் — வேறு வகையாலின்றிச் செய்யுள் விகார வகையால்.

"ஈற்றுவகையான்......அப்பான் மூன்றென்ருர்"

என்பது, னஃகானொற்று ளஃகானொற்று ரஃகானொற்று முதலியன அவ்வப்பாலினை யுணர்த்துதலிற் சிறப்புடையனவாதலின் அவற்றையே அவ்வப்பாலினை யுணர்த்துவனவாகக் கூறி ஒன்றன் பாலையுணர்த்தும் டுதுறுக்களும் பலவின்பாலையுணர்த்தும் அ ஆ வக் களும் ஒன்றன்பாலிற்குமுரியனவாயினும் (உணர்த்தற்குரியன வாயினும்) ஒன்றன்பாலிற்குரியவை தன்மை யொருமைக்குரியன வாகவும் பலவின்பாலிற்குரியவையுட்சில பெயரெச்சங்கட்குரியன வாகவும் வருதலால் னஃகானொற்று முதலிய போலச் சிறப்பானவை யல்ல எனக்கருதி ஒன்றன்பாலீறுகளை ஒன்றறிகிளவி யென்னுமல் அவற்றை யீற்றிலேயுடைய சொற்களை 'ஒன்றறிகிளவி' எனவும் அவற்றைப் போலவே பலவின் பாலீறுகளைப் பலவறிகிளவி யென்னு மல் அவற்றை யீற்றிலேயுடைய சொற்களைப் 'பலவறிகிளவி' யெனவும் வேற்றுமை தெரிய ஆசிரியர் கூறினர். கூறுமிடத்துப் பலவறிசொற்கள் ஈறுகளாலேதான் மூன்ருகும் வேறு தன்மைகளால் மூன்ருதலில்லை யென்பாராய் "அப்பான் மூன்றே பலவறி சொல்லே" என ஈறுகளைச் சுட்டி மூன்ருதற்குக் காரணம் அவையே யென அறியவைத்தனர் என்கின்றது.

ஆண் பெண் பலர்பாலை யுணர்த்துவன வெல்லாம் உயர்திணைச் சொற்களாயினும் ஆண்பால் முதலியவற்றை யுணர்த்துதல் வேற்றுமையால்அச்சொற்கள் மூன்றுவகைப்படுதல்போல அஃறிணைப் பலவின்பாலை யுணர்த்துவன. உயிருடைப் பொருள்கள் உயிரில்

பொருள் பண்பு முதலியனவற்றை வேறு பிரித்துணர்த்துதலாலிங்கு வேறு படலில்லை. பலவின்பாலை யுணர்த்தும் வகையில் வேறுபடா திருத்தல் போலவே ஒன்றன்பாலையுமுணர்த்துவகையால் வேறு பட லில்லை, ஈற்றுவகையாலேதான் ஒன்று, பல என்னும் பாலறி சொற்கள் மும்மூன்றாயின என்பதை வெளிப்படுத்தவே "அப்பான் மூன்றே பலவறி சொல்லே" என்றன ரென்பதாம்.

இக் கருத்தின்றேல் "அ ஆவவெனவரூஉமிறுதிப் பலவறி சொற்று மூன்றுகும்மே" என்பதுபோல யாக்கப்பட்டிருக்கு மென்பதாம்.

அன்பெறுது..............உரைக்க. என்பது 'உண்குவ தின்குவ' என்பன 'அன்' சாரியைபெற்று உண்குவன, தின்குவன எனவராமையால் உண்குவ தின்குவ என்பனபோன்றவற்றிலுள்ள ஈறு அகர ஈறன்று 'வகர' வீறே யாகும். அகர வீறாக இருந்தால் உண்ப, உண்பன என வருதல்போல உண்குவ உண்குவன என அன்சாரியை பெற்றும் பெருதும் வரல் வேண்டும். அவ்வாறு வாராமையானும் எல்லா முதனிலையடியாகவும் அகர வீறு வருதல் போல வகர வீறும் வருதலானும் வகர வீறென ஒன்று தனியாகக் கொள்ளப்பட்டதென்கின்றது.

வகர வீறென்பதை யறிவதற்கு இடையில் 'குகரம்' வரும் அதனுல் வேறுபாடு தெளிவுறும் எனவுங் கூறுகின்றது.

"வருவ செல்வ.........என்பது" என்பது, வருவ செல்வ என்பன முதலியன குகரச் சாரியைப் பெருத இடத்து அகர வீறெனக் கொள்வதா வகர வீறெனக் கொள்வதா எனின்; அவ்வாறு வருமிடத்து அகர ஈறெனவுங் கொள்ளலாம் வகர ஈறெனவுங் கொள்ளலாம்; எல்லா முதனிலை யடியாகவும் இரண்டும் வருதற் கேற்பனவாக இருத்தலின் என்கின்றது. அகர வீறெனக்கொள்ளு மிடத்து அங்கே தோன்றும் வகர வொற்றுக் காலங்காட்டு மிடை நிலையாகும். வகரவுயிர் மெய்யே ஈறாக வருமிடத்து அதுவே பலவின் பாலையும் காலத்தையும் ஒருங்கே காட்ட வல்லதாகின்றது.

குறிப்பு:- "ஒன்றறிகிளவி........குன்றியலுகரத்திறுதியாகும்" என்பதனுரையில், "குன்றியலுகரமென மெலிந்து நின்றதெனவுரைத் தனர்;" "குற்றியலுகரங் குற்றியலுகர மாய்தமென்ற முப்பாற் புள்ளியும்" என்னு நூற்பா (தொல் – எழுத் – நூன்மரபு – உ) முதலியவற்றிலுண்ட ஆட்சிக்கு மாறுபட்டிருத்தலானும் குறுகுதலே யொழிய குன்றுதலில்லை யாதலானுமென்க. அந்நூற்பாவில் 'சிறப்புமுறை' என்பது தெரிநிலைக்கண் முக்கால இடை நிலைகளு டன் வருதலோடு குறிப்பு வினையில் வருதலும் தெரிநிலையில் இறந்த கால இடைநிலையுடன் வருதலுடன் குறிப்பு வினையில் வருதலும குறிப்பு வினைக்கண்மட்டும் வருதலுமாகிய சிறப்பானிற்குமுறை என்பதாம்.

10 " இருதிணை மருங்கின் ...... வினையொடு வருமே "

புலப்படுதற்கண் = சொல்லாகிய உறுப்பியின்கண் டோன்றுமிடத்து, வினைக்குறிப்பாகப் புலப்படும் = வினைச்சொல்லாகிய வுறுப்பியி னுறுப்பாகத் தோன்றும்.

" திணையிரண்டே..............என்றூர்'' என்பது முன்னர் " உயர்திணையென்மனூர் " என்னும் நூற்பாவினுலும் " ஆடூஉ வறிசொல்'' ''ஒன்றறிசொல்' 'என்னும் நூற்பாக்களினுலும் திணையிரண்டென்பதும் பால் ஐந்தென்பதும் பெறப்படினும் திணையிரண்டே வேறில்லை. பாலைந்தே வேறில்லை யென்னும் வரையறை யவற்றூற் பெறப்படாமையானும் பெற்றவற்றைப் பெயர்த்துரைப்பில் அவற்றின் வரையறை பெறப்படு மாதலானும் மீண்டும் " இருதிணை மருங்கினைம்பால் " எனக் கூறின ரென்கின்றது.

" ணகரம், ளகரம், ரகரம், மார் " என்னும் நான்கும் இறுதியில் வருமென முன்னர்வந்த நூற்பாக்களில் கூருமையால் அவைகளுமிறுதியிற்றூன் வரும் என்னு மறிவைக் கற்போருக்குண்டாக்குதலால் அவ்வாறு கூறியது (அதாவது அந்நான்கையுங் குறித்து ஈற்றினின்றிசைக்குமெனக் கூறியது) ஞாபகமாயிற்று எனவும் அவையொழிந்த பகர முதலிய ஏழும் இறுதியில் வருமென்பது மேனூற்பாக்களாலறியப்பட்டமையால் அவற்றைக் குறித்து ''ஈற்றினின்றிசைக்கும்'' என்பது அநுவதித்தல் மட்டுஞ் செய்வதாக ஆயிற்று, அவை யிறுதியில் வருமென்னும் அறிவை யிங்குண்டாக்கவில்லை யாதலால் ஞாபகமாகாது எனவுங் கூறுவார், " ணகாரமும் ளகாரமும் ....
........என்க.'' என்ன விளக்கங் கூறினர்.

இத்தொடரின் இறுதியில் 'என்றூர்' என்பது 'என்க' எனவே எழுதப்பட்டதாகும். 'என்றூர்' எனிற் பொருந்தாமை காண்க. 'அநுவாத மாத்திரம் ஆயிற்றென்க' என இருப்பினன்றூம்.

ஞாபகம் — அறிவை யுண்டாக்குவது. அநுவாதம் — வழிமொழிதல். முன்மொழிந்ததனையே ஒருபயனேக்கிப் பின்னுமெடுத்து மொழிதல். '' அறத்தினூஉங்காக்கமுமில்லை " என மொழிதல் போன்றதென்க.

பொதுவாகச் சொற்களி னீற்றில் பதினே ரீறும் வருமெனப் பெறப்பட்டதை விலக்கி அவை, யெல்லாச் சொல் லினிறுதியிலும் வாரா வினைச்சொல்லின் இறுதியிற்றூன் வரும் எனக் கூறுதலே பயனுகும் என்க.

'அநுவாத மாத்திரம்' என்றதனல் பகர முதலிய ஏழீறும் அநுவதிக்கப்பட்டன ணகரமுதலிய நான்கீறும். அநுவதிக்கப்படலோடு ஞாபிக்கவும் என்பது பெறப்பட்டது.

[தொடரும்]